பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 06 வெள்ளிக்கிழமை 20.05.2022 கதிர் 196

**இது ரகசியம் அல்ல!**

பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகளோடு பல விடயங்கள் செயலிழந்து விட்டன. பழைய அமைச்சரவை காலாவதியாகிவிட்டது. பழைய அமைச்சுக்களின் செயலாளர்களின் நியமனங்களும் செயலிழந்தன. ☞2

# அரசில் சேரும் விக்கியின் கருத்துக்கு பங்காளித் தலைவர் ஸ்ரீகாந்தா சாட்டை

## அரசியலில் ஒன்று சேர்ந்து பயணிக்க இந்த நிலைப்பாடு சரிப்பட்டு வராதாம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், மே 20

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், அமைச்சு பதவி தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்தை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அதனை முற்றுமுழுதாக நிராகரிக்கிறார்கள் எனவும் அதன் பங்காளி கட்சியான தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார். ☞12

## கொழும்பில் பல்கலை மாணவர் பேரணி மீது கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு; நீர்த் தாரை!





அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று கொழும்பு தாமரைத் தடாகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணியொன்று ☞2

## 10,000 டொலர்களுக்கு மேல் வைத்திருந்தால் இனிக் குற்றம்

இலங்கையர்கள் தமது கையில் பணமாக வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## வரணி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணியில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் ☞2

## பாணின் விலை யாழில் ரூ.170/=

யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 170 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். பணிஸ் ☞2

## இரவு மின்வெட்டு தவிர்ப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளமையால் மின்வெட்டு நேரங்களில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 22ஆம் திகதி முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பரீட்சை இடம்பெறும் காலத்திலும் மாலை 6 மணியின் பின்னரும் மின் தடையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என பொதுப் பயன்பாடுகள் ☞2

## இரண்டாவது ஜனாதிபதிப் பதவியோடு மஹிந்த ஓய்வு பெற்றிருக்க வேண்டும்!

### இப்போது விசனப்படுகின்றார் தமையன் சமல்



முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமாகிய மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகித்ததன் பின்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ☞2



## சகல பாடசாலைகளும் நேற்றுடன் மூடப்பட்டன

### அத்தியாவசிய சேவைகள் மட்டும்தான் இன்று

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எரிபொருளுக்குப் பற்றாக்குறை நிலவுவதனால் இன்று சகல பாடசாலைகளும் மூடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலைகளுக்குமான முதலாம் தவணை இன்றுடன் நிறைவடைவதாக இருந்த போதிலும் நாட்டில் நிலவும் கடுமையான எரிபொருள் நெருக்கடியினால் சகல அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணை ☞2

## இலங்கையில் தமிழர்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலையே என ஏற்றது கனடா

### மே 18 அதற்கான நினைவேந்தல் நாளாகவும் அங்கீகாரம்

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என கனடிய நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. அத்துடன், ஒவ்வொரு ஆண்டும் ☞2

## ரணில் மந்திரவாதியல்லர்; ஆனாலும் நல்ல அன்பவசாலி என்கின்றார் சித்தர்



தொப்பியில் இருந்து எடுத்து பெற்றோலையும் உணவுப் பொருள்களையும் காஸ் சிலிண்டர்களையும் தருவதற்கு நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்க மந்திரவாதியல்லர். இருந்தாலும் என்னைப் பொறுத்தமட்டிலும் அவர் பொருளாதார கட்டமைப்பை ஓரளவு சீர்செய்யக்கூடியவர் என்ற நம்பிக்கை இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ☞12



## காலிமுகத் திடல் நினைவேந்தலை மெச்சுகிறார் டக்ளஸ் தேவானந்தா

மக்களின் நீதியான உரிமைப் போராட்டத்தில் ஆகுதியான அனைத்து விடுதலை இயக்கப்போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்துகிறார் எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இறுதி யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும் அனைத்து மக்களும் நினைவு கூர்வது பற்றிய தனது எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கும் ☞12



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதே வரிசையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவிகளும் 'அவுட்'!

இனி, புதிதாக மாவட்ட இணைப்புக் குழுத்தலைவர்கள் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பல அதிகாரங்களை – முடிவு, தீர்மானங்களை எடுக்கும் உரிமைகளை – அதற்கான சுதந்திரத்தை – தாராளமாக விட்டுக் கொடுத்து வருகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதில் மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர் தெரிவு விடயமும் அடங்கும் என்று தெரிகின்றது.

மாவட்ட இணைப்புக் குழுத் தலைவராகக் கட்டாயம் ஓர் எம்.பிதான் இருக்க வேண்டும் என்பதில்லை. வெளியாரையும் கூட ஜனாதிபதி அந்தப் பதவிக்கு நியமிக்க முடியும். எம்.பி. இல்லாமல் சொற்ப காலத்துக்கு கிளிநொச்சி மாவட்ட இணைப்புக் குழுத் தலைவராக சந்திரகுமார் இருந்தமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

ஆக, யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை இது விடயத்தில் அமுல் பேபியின் ஏகபோகம் 'அவுட்' என்று தெரிகின்றது. இம்முறை யாழில் ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு இணைத் தலைவர் பதவியே வழங்கப்படும் என உள்வீட்டு வட்டாரங்கள் கூறுகின்றன. அதில் ஒருவராக அமுல் பேபி இருக்கக்கூடும். அத்தோடு டக்ளஸுக்கும் அந்தப் பதவி பகிரப்படலாம்.

ரணில் தலைவராக இருக்கும்போது ஐ.தே.கட்சிக்குப் பெரும் தோல்வி வந்த போதிலும் கட்சியை விட்டு விலகாமல் நின்று பிடிக்கும் திருமதி விஜயகலா மகேஸ்வரனை யாழ் மாவட்டத்துக்கான ஓர் இணைத் தலைவராக நியமிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார் எனத் தெரிகிறது. பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் இவ்விடயம் குறித்து விஜயகலா மகேஸ்வரனுடன் பிரதமர் ரணில் பேசியிருக்கிறார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இணைத் தலைவர் பதவி வழங்கப்படாவிட்டால், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தமது விசேட பிரதிநிதியாக விஜயகலா மகேஸ்வரனை பிரதமர் ரணில் நியமிப்பார் எனத் தெரிகின்றது – முன்னைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்களுக்குத் தனது பிரதிநிதியாக காசிலிங்கம் கீதநாத்தை நியமித்தமை போன்று.

இப்போது அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைந்துவிட்டமையால் இதற்குப் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வேலைகளில் அமுல் பேபியின் ஈடுபாடும் குறைந்தே இருக்கும் என்றே நினைக்கிறேன். வரும்படி இல்லாத இடத்தில் நேரத்தைச் செலவிட எங்கள் அரசியல்வாதிகள் என்ன முட்டாள்களா?

இப்போதைய நாடாளுமன்ற அமர்வின் கடைசி தினம் இன்றாகும். இன்று நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் அவர் தன்னிலை விளக்கம் தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ ★ ★

கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் – அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியும் ஏனையோரும் – சத்தம் சந்தடி இன்றி அரும்பெரும் சாதனை ஒன்றை எட்டிப் பிடித்து இருக்கின்றார்கள். இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிறைவேற்றப்பட்டமையை ஒட்டி மே 18 ஆம் திகதியை வருடாந்தம் நினைவேந்தல் நாளாக அனுஷ்டிக்கும் தீர்மானமொன்றை அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் சத்தம் சந்தடியின்றி ஏகமனதாக நிறைவேற்றச் செய்திருக்கின்றார்கள் நம் தமிழர் உறவுகள்.

நினைவேந்தல் நாள் பிரகடனம் அல்ல இதில் முக்கியமான விடயம்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டது இனப்படுகொலையே என்பதும், அந்த தீர்மானத்தின் மூலம் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தின் ஏக முடிவு என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டது இனப்படுகொலையா? இனச் சுத்திகரிப்பா? இனவழிப்பா? வெறும் யுத்தக் குற்றங்களா? மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் மட்டுமா? மக்கள் கூட்டத்தின் மீதான பெரும் வன்முறையா? – என்றெல்லாம் பல மட்டங்களிலும் சர்ச்சைகள் கிளப்பப்பட்டு வருகையில், இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்று தீர்க்கமான முடிவை – சர்ச்சைகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் இன்றி, ஒரு நாடாளுமன்றத்தில் ஏகமனதாக எடுக்க வைத்து, சாதனை புரிந்து இருக்கின்றார்கள் நமது கனடா நாட்டுப் புலம்பெயர் உறவுகள்.

தமிழருக்கு இழைக்கப்பட்டவை இனப்படுகொலை என அழைக்கலாமா, அதற்குப் போதிய ஆதாரங்கள், சான்றுகள், ஆவணப்படுத்தல்கள் உள்ளனவா என்ற சந்தேகங்களைக் கிளப்பாமல் நடந்தது இனப்படுகொலை என்று நமது அரசியல் தலைவர்கள் இனியாவது காரியம் ஆற்றுவார்கள் என்று நம்புவோமாக...!

– மின்னல் –

## இரண்டாவது ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்குத் தவறியதன் விளைவாகவே தற்போதைய சூழ்நிலைகளை எதிர் கொள்கின்றார்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் கொண்ட அவரது சிறந்த அரசியல் சாதனைகள் மற்றும் பயணம் என்பன தற்போது இழக்கப்பட்டு விட்டன.

அரசியலில் நுழைந்து ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல், சரியான நேரத்தில் அரசியலிலிருந்து வெளியேறுவதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதிகாரத்திற்கும் அரசியல் பதவிகளுக்கும் நாங்கள் பேராசை கொண்டால் இன்று நாம் காணும் விளைவுகளை எதிர் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனவும் சமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## 10,000 டொலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், மேலதிகமாக வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயங்களை வங்கியின் வெளிநாட்டுக்கணக்கில் வைப்புச்செய்வதற்கோ அல்லது அவற்றை ரூபாவாக மாற்றுவதற்கோ இருவார கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேலதிக வெளிநாட்டு நாணயத்தை வங்கியில் வைப்புச் செய்யாமல் கைகளில் வைத்திருப்பவர்கள், அந்த பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கும் இரு வார கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

இருவாரத்தின் பின்னர் உரிய அளவை காட்டிலும் மேலதிகமாக வெளிநாட்டு நாணயத்தை கைகளில் வைத்திருப்பவர்களிடம் அபராதம் அறவிடப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அந்த அபராதம் அவர்கள் கையில் வைத்திருக்கும் தொகையை விடவும் அதிகமானதாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையர்கள் தமது கையில் பணமாக வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி 15 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வரணி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஜந்தன் (வயது 30) இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மின்கம்பத்தில் மோதியதில் அவர் உயிரிழந்தார்.

## பாணில் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்ட ஏனைய பேக்கரி பொருள்களின் விலைகளில் மாற்றமில்லை என யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் க.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியமற்ற அரச பணியாளர்கள் இன்று கடமைக்கு வரத் தேவையில்லை!

### பிரதமர் ரணில் அதிரடி அறிவிப்பு; எரிபொருள் தட்டுப்பாடு காரணமாம்

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்களைத் தவிர, ஏனைய அரச ஊழியர்கள் இன்று பணிக்கு வரத் தேவையில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போதைய கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிரமங்களைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அத்தியாவசியமற்ற பயணங்களை இன்று தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களிடமும் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அன்றாடம் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காகச் செலவு செய்வதற்குத் திறைசேரியில் நிதி இல்லை எனவும், இது தொடர்பான விரிவான அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்றாட நுகர்வுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குரிய செலவினங்களுக்காக உடனடியாக நிதியைத் தேட வேண்டியுள்ளது. இந்த விடயம் இலங்கையை மாத்திரம் பாதிக்கும் பிரச்சினையல்ல.

உணவு நெருக்கடி உலகளாவிய நெருக்கடியாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதனை முன்னதாகவே அறிந்து, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உலக வங்கி 30 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது – என்றார்.

## சகல பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுடன் நிறைவடைந்ததாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக ஜூன் மாதம் ஆறாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச பணியாளர்கள் தவிர ஏனைய அரச உத்தியோகத்தர்கள் இன்று கடமைக்குச் சமுகமளிக்கத் தேவையில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தமையைத் தொடர்ந்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் இது தொடர்பான சுற்றுநிருபம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

## கொழும்பில் பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்..

இந்தப் பேரணியானது பொல்துவ சந்தியிலுள்ள நாடாளுமன்ற நுழைவுப் பகுதிக்கு வரலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதியிலும் ஜனாதிபதி செயலகப் பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் கொழும்பில் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

## இலங்கையில் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மே-18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஏற்று கனடா நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் நாடாளுமன்றமாக கனடா நாடாளுமன்றம் அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இதற்கான பிரேரணையை ஸ்கார்பரோ – ரூஜ் பார்க் தொகுதி கனேடிய-தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி நேற்று முன்தினம் மாலை முன்வைத்தார்.

இந்த பிரேரணையை நாடாளுமன்றில் அனைத்து கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ் இனப்படுகொலை தீர்மானம் ஏகமனதாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை தினமாக ஏற்று அங்கீகரிக்கும் உலகின் முதலாவது நாடாளுமன்றம் கனடாவாகும் என ஹரி ஆனந்தசங்கரி ட்வீட் செய்துள்ளார்.

கனடா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பல வருடகால உழைப்பு. தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலரது உழைப்பின் உச்ச விளைவாக இது நடந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரவு மின்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழு மின்சார சபையை அறிவுறுத்தியுள்ளது.

இதற்கு அவசியமான எரிபொருள் மற்றும் நீர் உள்ளிட்ட வளங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

பரீட்சார்த்திகளின் நலன்கருதி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அசாத்திய முயற்சியில் ரணில்!

பொருளாதார நெருக்குவாரத்தில் இருந்து – வீழச்சியில் இருந்து – நாட்டை மீட்டெடுக்கும் மீட்பராக வந்திறங்கியிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த முயற்சியில் தடுமாறுகின்றார் என்கின்றன செய்தி வட்டாரங்கள்.

'சாண் ஏற முழம் சறுக்கும்' சங்கட நிலையில் அவர் அல்லாடுகின்றார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், உலக வங்கியும் தலா 16 கோடி அமெரிக்க டொலர்களை (தலா சுமார் 5 ஆயிரத்து 600 கோடி ரூபாவை) அவசர கடனுதவியாக வழங்க முன்வந்திருக்கின்றன என்ற செய்தி வெளியான அதேசமயம், மணிலாவைத் தளமாகக் கொண்டியங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகள் கிடைப்பது தடைப்படும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே அறிவித்திருக்கின்றார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்குக் கடந்த மாதத்தில் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணமான முப்பது லட்சம் டொலரை கட்டத் தவறியமையால், அந்த வங்கி மூலமான மேலதிக கடனுதவிகளைப் பெற முடியாமல் அந்த வழி அடைபட்டிருப்பதாக விசனம் தெரிவித்திருக்கின்றார் பிரதமர். அந்தக் கடன் தவணைக் கட்டணம் கடந்த ஏப்பரல் 18ஆம் திகதி செலுத்த வேண்டிய நிலுவை. இலங்கைப் பெறுமதியில் அதன் இன்றைய தொகை சுமார் நூறு கோடி ரூபா. அதைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட மேலதிக சலுகைக் காலமான ஒரு மாதம் நேற்றுமுன்தினம் முடிவடைந்தமையை அடுத்து, இலங்கை அந்த வங்கியின் கறுப்புப் பட்டியலுக்குள் வந்து விட்டது. அதனால் அதன் ஊடான உதவித் திட்டங்கள், வழிமுறைகள் முழுமையாகத் தடைப்படும் நிலைமையும் வந்து விட்டது.

"எப்படியாவது – எங்காவது – அந்தப் பணத்தைத் தேடி திரட்டிக் கொடுத்து, அந்த நிறுவனம் மூலமான உதவித் திட்டங்களைத் தொடர்ந்து ஈட்டுவதற்கான முயற்சிகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன" – என்கின்றார் பிரதமர்.

ஏற்கனவே இலங்கை, தான் பெற்றுக் கொண்ட சர்வதேச இறைமை முறிகள், பிணை முறிகள், வர்த்தக வங்கிகளின் கடன்கள், இறக்குமதிக் கடன்கள், இருதரப்புக் கடன்கள் போன்றவற்றுக்கான தவணைக் கட்டணங்களை செலுத்துவதை நிறுத்தி, கடன் மீளச் செலுத்த வழியில்லாத – வக்கற்ற – தனது நிலைமையைப் பகிரங்கப்படுத்தியிருந்தது.

எனினும், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற – எதிர்காலக் கடன் வசதிகளுக்குத் தான் தங்கியிருக்க வேண்டிய – தரப்புகளின் தவணைக் கட்டணங்களையாவது செலுத்துவதன் மூலம் அவற்றின் ஊடான கடன்வசதிகள் மேலும் கிட்டுவதற்கான வாய்ப்பு அடைபடாமல் பார்த்துக் கொள்ள முயன்றது இலங்கை. என்றாலும் அதுவும் கூட கையை மீறிச் சென்று அடைபடும் சூழலே தோன்றியிருக்கின்றது.

இந்த ஆண்டில் இதுவரை இலங்கை செலுத்தத் தவறிய கடன் நிலுவைத் தொகை, இனி வரப்போகின்ற தொகைகள் எல்லாம் பில்லியன் டொலர்களில் கூட்டிக் கழித்துப் புள்ளிவிவரங்களாக வெளியிடப்படுகின்றன. அவற்றைப் பார்க்கும் போது இந்த நாடு கடன் நெருக்கடியிலிருந்து மீளும் என்ற நம்பிக்கையே பிறப்பதாக இல்லை.

"செலுத்த வேண்டிய தொகை – கடப்பாடு – ஒரு பில்லியனாகவும் இருக்கலாம், பத்து பில்லியனாகவும் இருக்கலாம். ஆனால் கடன் செலுத்த ஒரு மில்லியன் (ஒரு பில்லியனில் ஆயிரத்தில் ஒன்று) கூட கையிருப்பில் இல்லை என்பதுதான் நிலைமை" – என்று வெளிப்படையாக உண்மையை ஒப்புக் கொள்கின்றார் பிரதமர்.

இந்த நிலையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கிடக்கும் நாட்டை மீட்பது என்பது அசாத்தியமான விவகாரம்தான்.

# எம்.பிக்களின் கௌரவத்தை பஸில் சிதைத்துவிட்டாராம்!

## விஜயதாஸ ராஜபக்ஷ வேதனை



பொருளாதாரத்தை வேண்டுமென்றே பாதிப்பிற்குள்ளாக்கியவர்களுக்குதண்டனை வழங்குவதற்கு பதிலாக அமைச்சர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை தவறான முறையில் வழிநடத்தி அவர்களின் கௌரவத்தை முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவே இல்லாதொழித்துள்ளார்.

அவரை பின்தொடர்ந்தவர்களை நெருக்கடிக்குள்ளாக்கி விட்டு அவர் பாதுகாப்பான முறையில் வலம் வருகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கூட்டத் தொடரின் போது நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்வங்கள் மற்றும் சொத்துகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பிலான ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியல் செய்வதும்,மக்களுக்காகச் சேவையாற்றுவதும் அடித்து கொலை செய்யும் அளவிற்கும்,வீடுகளுக்கு தீ வைக்கும் குற்றமாயின் ஏன் நாம் அரசியல் செய்ய வேண்டும். எங்கு தவறிழைத்துள்ளோம்.

நமது வாழ்வில் பெருமளவிலான காலத்தை நாட்டுக்காக அர்ப்பணித்துள்ளோம்.ஒருசிலநாடாளுமன்றஉறுப்பினர்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியுடன் அரசியல் நெருக்கடி தோற்றம் பெற்றது.பொருளாதார நெருக்கடி ஏற்படாமலிருந்தால் நாடு தற்போது இந்த நிலைமையை எதிர்கொண்டிருக்காது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தை ஸ்தாபித்து நாட்டில் பல விடயங்களை செயற்படுத்தினோம். அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஊடாக பல முன்னேற்றங்களை அடைந்தோம்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஊடாக பல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் திருத்தம் ஊடாக ஏற்படபோகும் விளைவுகளை முன்கூட்டியதாக எடுத்துரைத்தோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடனான அரசாங்கம் முன்னெடுத்த தவறான தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணியாக அமைந்துள்ளன.

பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கியவரை பி.பி. ஜயசுந்தரவை ஜனாதிபதி செயலாளராக நியமிக்க வேண்டாம் என ஆரம்பத்தில் குறிப்பிட்டோம்.

நிதி மோசடி குற்றச்சாட்டுள்ள அஜித் நிவார்ட் கப்ராலை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டோம். எமது கருத்துக்கு அன்று மதிப்பளிக்கப்படவில்லை. நாடாளுமன்றில் உரையாற்றும் வாய்ப்பும் கிடைக்கப்பெறவில்லை.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் வரிச்சலுகை வழங்கப்பட்டதால் 250 கோடி ரூபா நிதியை அரசாங்கம் இழந்தது.வரிச்சலுகை வழங்காமலிருந்திருந்தால் 250 கோடி ரூபா நிதி திறைச்சேரியில் இருந்திருக்கும், இன்று மில்லியன் நிதிக்கு கூட யாசகம் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.கடன் செலுத்த வேண்டாம், கடன் மீள் பரிசீலனை செய்வோம் என அஜித் நிவார்ட் கப்ராலிடம் குறிப்பிட்டோம்.

தேவையான அளவு டொலர் உள்ளது. அரசமுறை கடனை செலுத்த முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார். தற்போது திறைசேரியில் மிகவும் குறைந்தளவிலான டொலர்கள் மாத்திரமே உள்ளன.

பொருளாதார நெருக்கடியை வேண்டுமென்றே நெருக்கடிக்குள்ளாக்கியவர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.இவர்களுக்குப் பதிலாக அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைக்கப்படுகிறது.மோசடியாளர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்கும் போது அதனை தடுக்காத சிரேஷ்ட உறுப்பினர்களும் தற்போது பொறுப்புக் கூற வேண்டும்.

சட்டவாட்சி கோட்பாட்டை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. சிறந்த எதிர்பார்ப்புகளுடன் நாடாளுமன்றுக்கு தெரிவான இளம்நாடாளுமன்றஉறுப்பினர்களின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகியுள்ளது. இரட்டை குடியுரிமையுடையவர் நாடாளுமன்றுக்கு வருவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டாம் என ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டோம்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினை தொடர்பாக இரட்டைக் குடியுரிமை கொண்ட நபருக்கு அக்கறை கிடையாது. அவரை பின்தொடர்ந்த அமைச்சர்களின் வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. ஆனால் அவர் பாதுகாப்பான முறையில் சொகுசு தொடர்மாடியில் வாழ்கிறார்.அமைச்சர்களைத் தவறான வழிநடத்தி இன்று தண்டனைக்குள்ளாக்கி நாடாளுமன்ற உறுப்பினர்களின்கௌரவத்தைபஸில்ராஜபக்ஷவே இல்லாதொழித்துள்ளார்.

இரட்டை குடியுரிமை உள்ளவர் நாட்டின் எதிர்காலத்தை இல்லாதொழித்துள்ளார். 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றி ஜனநாயக மிக்க அரசியல் செயலொழுங்கினை செயற்படுத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

# பொதுப் பாதுகாப்பு அமைச்சு செயலர் பிரதம நீதியரசருக்கு சட்டத்துக்கு முரணான வகையில் கடிதம் எழுதியுள்ளார்

## தலதா அத்துகோரள ஆட்சேபம்

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நாட்டின் மூன்றாவது குடிமகனான பிரதம நீதியரசருக்கு, சட்டத்துக்கு முரணானவகையில்கடிதம்எழுதியுள்ளார் என நாடாளுமன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக செயற்படும், இராணுவ அதிகாரியான ஜெகத் அல்விஸே, பிரதம நீதியரசருக்கு கடிதம் எழுதியுள்ளார் எனத் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரருக்கு கடிதம் எழுதவேண்டுமானால், அல்லது எதனையும் கூற வேண்டுமானால், ஒருவர் சட்டமா அதிபர் ஊடாகவே மேற்கொள்ளமுடியும்.

எனினும் கடந்த 12 ஆம் திகதியன்று ஜெகத் அல்விஸ், பிரதம நீதியரசருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், போராட்டங்களை தடுப்பதற்காக பொலிஸ் தரப்பு கோரிக்கை விடுத்தபோதெல்லாம், கனிஷ்ட நிலை நீதிவான்களால் அவை நிராகரிக்கப்பட்டன. இதன் காரணமாகவே இன்றைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது சட்டத்துக்கு புறம்பான செயலாகும்.

நாட்டின் மக்கள் இன்று நாடாளுமன்றின் 225 பேரும் வேண்டாம் என்று கூறும் போது நீதியை எதிர்பார்க்கும் இடமாக நீதிமன்றங்களே உள்ளன. இந்தநிலையில் நீதிமன்றங்களையும் செயலிழக்கச் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது என்றும் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.



நாடு கடந்த திபெத்திய அரசாங்கத்தின் அமர்வு

# சீனாவுக்குத் தொல்லை தரும் திபெத்திய நாடு கடந்த அரசு!



நாடு கடந்த திபெத்திய அரசாங்கத்தின் தலைவர் பென்பா செரிங்

நாடு கடந்த திபெத்திய அரசாங்கத்தின் தலைவர் பென்பா செரிங் கனேடிய நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அளித்த சாட்சியத்திற்கு கனடாவிலுள்ள சீனத் தூதரகம் சனிக்கிழமையன்று கடும் அதிருப்தியை அளித்துள்ளது.

திபெத்திய நாடு கடந்த அரசாங்கத்தின் தலைவர் பென்பா செரிங் அந்நாட்டிற்கு வர அனுமதித்தமை, மேலும், கனேடிய வெளிவிவகாரங்கள் மற்றும் கனேடிய கொமன்ஸ் நிலைக்குழு முன் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தமை போன்ற கனடாவின் நடவடிக்கைக்கு சீனத் தூதரகம் கடும் அதிருப்தியையும் உறுதியான எதிர்ப்பையும் தெரிவித்திருக்கின்றது.

சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர், திபெத் சுதந்திரத்தை அடைவதற்கான நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட நாடு கடந்த திபெத்திய அரசாங்கத்தை பிரிவினைவாத அரசியல் அமைப்பு என்று அழைத்தார்.



பென்பா செரிங், தலாய் லாமாவைச் சந்திக்கும் போது...

மத்திய திபெத்திய நிர்வாகம் (சி.டி.ஏ.) என அழைக்கப்படும் இந்தச் நாடு கடந்த அரசாங்கத்தின் தலைவர், 'திபெத் சுதந்திரம்' என்ற கருத்தை விற்பதற்கும், திபெத் தொடர்பான பிரச்சினைகளை சர்வதேசமயமாக்குவதை முன்னெடுப்பதற்கும் வருகை தந்ததன் நோக்கம், சீனாவுக்கு எதிரான ஒரு பிரிவினைவாதத் திட்டத்துடந்தான் என்று சீனத் தூதரக செய்தித் தொடர்பாளர் மேலும் குற்றம் சாட்டினார்.

"திபெத் – சீனா உரையாடல் என்று அழைக்கப்படுவதைப் பொறுத்தவரை, நான் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், எந்த ஒரு திபெத்திய 'வெளிநாடு அரசாங்கத்தையும்' நாங்கள் அங்கீகரிக்கவில்லை, மேலும் இதுபோன்ற சட்டவிரோத அமைப்போடு சீன அரசு ஒருபோதும் பேச்சு நடத்தாது என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

இத்தகைய திபெத்திய நாடு கடந்த அரசாங்கத்தின் ஒவ்வொரு உத்தியோகபூர்வ கூட்டம் குறித்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தின் எதிர்ப்பு அறிவிப்பு தொடர்வது ஒரு புதிய நிகழ்வு அல்ல.

சமீபத்தில் வொஷிங்டன் டிசிக்கு சென்ற பென்பா செரிங்கின் அங்கு செக் நாட்டு வெளியுறவு மந்திரி ஜான் லிபாவ்ஸ்கியை சந்தித்தமை பராகுவேயில் உள்ள சீன தூதரகத்தின் கடும் விமர்சனத்தைத் தூண்டியது. அந்தத் தூதரகம் அந்த விடயத்தை ஒட்டி ஓர் அறிக்கையை வெளியிட்டது, அங்கு செக் தலைவரின் இந்த நடவடிக்கை பெய்ஜிங் நிர்வாகத்துடனான உறவுகளில் கடுமையான மீறல் என்று அந்த அறிக்கை கூறியது. திபெத்திய பிரிவினைவாத இயக்கத்திற்கு செக் மக்கள் ஒரு தவறான செய்தியை இந்நடவடிக்கை மூலம் அனுப்பியுள்ளனர் எனவும் அது குறிப்பிட்டது.

சீனாவிற்கு எதிரான பிரிவினைவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக (தலாய் லாமர்) மத விதிகளைச் சிதைத்து, வரலாற்று அமைப்பை புறக்கணித்து, அனுமதியின்றி வெளிநாட்டில் இருக்கும்போது ஒரு குழந்தையை 'பஞ்சன் லாமாவின் மறுபிறவி' என்று அறிவித்தார், இது சட்டவிரோதமானது மற்றும் செல்லாது. தேர்ந்தெடுக்கப்பட்ட மறுபிறவி சராசரி வாழ்க்கையை வாழும் வழக்கமான சீன குடிமகன் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கனேடிய அரசாங்கத்தின் உள்விவகாரங்களில் தலையிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் அறிக்கையை முடித்தார். மேலும் கனடா தொடர்ந்து 'சீனா எதிர்ப்பு' நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் உறுதி வெளியிட்டார்.

ஷிசாங் (திபெத்) சீனாவின் பிரிக்க முடியாத பகுதி என்பதையும் அது பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட உண்மை என்பதையும் நான் மீண்டும் வலியுறுத்த வேண்டும். ஷிசாங்கின் விடயங்கள் முற்றிலும் சீனாவின் உள்நாட்டு விவகாரங்கள், அவற்றில் வெளியில் இருந்து எந்தத் தலையீடும் செய்ய சீனா அனுமதிக்காது. ஷிசாங் தொடர்பான பிரச்சினைகளில் – சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் – தலையிடுவதை கனடா உடனடியாக நிறுத்த வேண்டும், அதே நேரத்தில் ஷிசாங்கின் நிலைத்தன்மையை சேதப்படுத்துவது, மேலும் பிரிவினைவாதிகளுக்கு – அவர்களின் சீனாவிற்கு எதிரான பிரிவினைவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள – ஆதரவையும் தளத்தையும் வழங்குவதையும் நிறுத்த வேண்டும். அல்லது சீனா அதற்கேற்ப பதிலளிக்க நிர்பந்திக்கப்படும்" – என்று சீனத் தூதரகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

தலாய் லாமாவின் பிரதிநிதிகளுக்கும் பெய்ஜிங்கின் பிரதிநிதிகளுக்கும் இடையே 2002 முதல் ஒன்பது சுற்று பேச்சுகள் நடந்த போதிலும், சீன அரசமைப்பின் கட்டமைப்பின் கீழ் உண்மையான சுயாட்சியை நாடும் நாடுகடந்த திபெத்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடான நடுத்தர வழி அணுகுமுறையை சீனா நிராகரித்தே வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் அரசியல்வாதிகள் எவருக்கும் சர்வதேசம் அடைக்கலம் கொடுக்கக்கூடாது

## யஸ்மின் சூக்கா ஆணித்தரம்



இலங்கையில் முழுமையான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வெறுமனே அதிகாரவர்க்கத்தால் மேற்கொள்ளப்படும் ஊழலையும் பொருளாதாரக் குற்றங்களையும் மட்டுமே கையாள்வதற்கானதாக அல்லாமல் பெரும் வன்கொடுமைக்குற்றங்களில் ஈடுபட்டுதண்டனைபெறாமல்தப்பியிருப் போர் தொடர்பிலும் தமிழர்களது நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான நீண்ட போராட்டத்துக்கும் தீர்வுவழங்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என இலங்கையில் நடைபெற்றுவரும் பாரிய மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி வரும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பு கூறியுள்ளது.

'பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட 2009 இறுதிப்போரின் இந்தச் சோகமான ஆண்டுதினத்தை நினைவுகூரும் தமிழ் மக்களுடன் நாமும் கைகோர்த்து நிற்கின்றோம்' என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் உறுப்பினருமான ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

பல தசாப்தங்களாகத் தொடர்ந்துவந்த பாரதூரமானசர்வதேசகுற்றச்செயல்களுக்கான தண்டனைகளிலிருந்து விலக்களிக்கும் நடைமுறை, ஊழல் மற்றும் பொருளாதாரக் குற்றங்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நடைமுறைக்கு இட்டுச்சென்று வரலாற்றின் மிக இக்கட்டான நிலைக்கு சிறிலங்காவை இன்று கொண்டுசென்றுள்ளது.

இன்று இலங்கையில் நிலவும் இந்த பரிதாபகரமான நிலைமைக்கு இதுவே காரணமாகும். தற்போதுள்ள தேவை நீதியும் பொறுப்புக்கூறலுமேயாகும். ஆனால் இலங்கை தொடர்ச்சியாக இதனைச் செய்வதற்கு விருப்பமற்று இருந்துவந்துள்ளது.

சர்வதேச சட்ட அதிகாரத்துக்குட்பட்ட வழக்குகளை ஆரம்பிப்பதையும் தடைகள் கொண்டுவருவதையும் ஏதுவாக்கத்தக்க வகையில் பெரும் வன்கொடுமைக் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் ஆகியவற்றின்மீது குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு குடிமக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 1989 இல் மாத் தளை மாவட்டத்தின் இராணுவக் கட்டளைத் தளபதியாக இருந்தவேளையில் அங்கு நடந்த பெருந்தொகையானோர் காணாமற்போனதில் அவரின் வகிபாகம் தொடர்பில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இந்த 1989இல் நடந்த வன்முறைக் காலத்தில் சாதாரண உடைகளில் வந்த பாதுகாப்புப்படை அதிகாரிகளால் நடத்தப்பட்ட வெள்ளைவான் கடத்தல்களும் நெருப்புக் கம்பிகளால் சூடு வைத்தல் உள்ளிட்ட சித்திரவதை களும் பெருமளவில் நடந்தன.

கடந்த முப்பது ஆண்டுகளில் பாதுகாப்புப் படைகள் தங்களது உத்திகளை மாற்றிக்கொள்ளவில்லை – மாறாக பாதிக்கப்படுபவர்கள் மட்டுமே மாற்றப்பட்டுள்ளார்கள் என சூக்கா தெரிவித்தார். ஜே.வி.பி. காலத்தில் நடந்த படுகொலை முதல் 2009 இல் நடந்த போரின் இறுதிக்கட்டம் என கடந்த காலங்களில் நடந்த குற்றங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது கூட்டாளிகளையும் பொறுப்புக்கூறவைக்க வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தொடர்ச்சியாக அழைப்புவிடுத்து வந்துள்ளது.

காணாமற்போனோரின் குடும்பங்கள்உட்படபாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்கள் தங்களுடைய சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரிந்துகொள்வதற்கும் அதற்குக் காரணமானவர்களைப் பொறுப்புக் கூறவைப்பதை எதிர்பார்ப்பதற்குமான தார்மீக உரிமையைக் கொண்டுள்ளன.

'நாட்டின் தலைமைப்பதவியிலுள்ள அரசியல்வாதிகள் பற்றி ஒருவர் கூறக்கூடிய மிகக்கனிவான ஒரு விடயம் என்னவெனில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட பெரும் அநியாயங்களுக்கு அவர்கள் பொறுப்புக் கூறத்தொடர்ச்சியாகத்தவறியுள்ளார்கள் என்பதே.

பல சம்பவங்களில் குறிப்பாக ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல்வாதிகள் பெரும் மனிதஉரிமை மீறல்கள் நடைபெறுவதற்கு உடந்தையாக இருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள் என யஸ்மின் சூக்கா கூறினார்.

அடுத்த தலைமுறையினர் உள்ளிட்ட அதன் குடிமக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களின் செலவில் தங்களது நலன்களை மட்டுமே முன்னிறுத்தி உயர்மட்ட அரசியல் வர்க்கத்தினர் ஆடும் மற்றவர் நட்டத்தில் தாம் லாபம் ஈட்டும் ஒருவகை விளையாட்டே இதுவாகும் என அவர் மேலும் கூறினார். எந்தவொரு இலங்கை அரசியல்வாதியும் சர்வதேச சமூகத்திடம் தொடர்பை ஏற்படுத்துவதையும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதையும் நிராகரிக்கும்படியும் அவர்களுடைய முறைகேடான ஆதாயங்களைத் திருப்பி அனுப்புவதையும் உறுதிப்படுத்தும் படியும் சர்வதேச சமூகத்திடம் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வேண்டிக்கொள்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் செய்யக்கூடிய ஆகக்குறைந்த செயல் இதுவாகவே இருக்கும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைதிவழி போராட்டக்காரர் மீது தாக்குதல் மேற்கொள்ள கைதிகளும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் அழைப்பு!

## அநுரகுமார தெரிவிப்பு

காலி முகத்திடல் அமைதிவழி போராட்டகாரர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள சிறைச்சாலை கைதிகளும், மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் மஹியங்கனை பகுதியில் யாசகம் பெற்ற நிலையில் இருந்தவர்களும் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுக்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் தொடர்பு உண்டு என்ற தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஆளும் தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பதை விடுத்து சுயாதீன விசாரணையை மேற்கொண்டால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என மக்கள் விடுதலை முன்னணியில் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கூட்டத் தொடரின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தொடர்ந்து நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுக்கும்,மக்கள் விடுதலை முன்னணிக்கும் தொடர்பு உண்டு என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ கருத்துரைக்கிறார். வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பலமுறை சபையில் உரையாற்றியுள்ளேன்.

கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அமைதி காத்துள்ளோம். நாடாளுமன்றில் ஜன நாயகத்தை உறுதிப்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்கியுள்ளோம். ஜனநாயகத்துக்கு முரணாகச்செயற்பட்டவர்கள் தற்போது நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்பாகக் கருத்துரைக்கிறார்கள்.

1983 ஆம் ஆண்டு நாம் தொடர்புபடாத கறுப்பு ஜூலை கலவரம் இடம்பெற்றது. திட்டமிட்ட வகையில் மக்கள் விடுதலை முன்னணி மீது தடை விதிக்கப்பட்டது. ஜெ.ஆர். ஜயவர்தன நடைமுறைப்படுத்திய பொருளாதார கொள்கைக்கும், ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டோம். நாட்டு மக்களின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் சகல செயற்பாடுகளுக்கும் எதிராகப் போராடுவோம்.

காலிமுகத்திடல்தாக்குதல்சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பெயரில் அநுராதபுரத்தில் 8 பேரும், தெனியாயவில் 3 பேரும், கம்புறுபிடியவில் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கும் மக் கள் விடுதலை முன்னணிக்குமிடையில் எவ்வித தொடர்பும் கிடையாது. முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுங்கள்.

நாடுதழுவிய ரீதியில் உள்ள 184 பொலிஸ் நிலையங்களில் 2 பொலிஸ் நிலையங்களுக்கு மாத்திரம் தகைமை அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மிகுதி 182 பொலிஸ் நிலையங்களுக்கு அரசியல் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கவும் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தாவிடின் தற்போதைய பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாது. மக்களின் எதிர்ப்பே போராட்டமாகவும்,வன் முறையாகவும் வெளிப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குலை நடத்த குண்டர்களை கொண்டு வந்தது யார்? சிறைக்கைதிகளும் தாக்குதலுக்காக கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

தனக்கு இந்த தாக்குதலை நடத்த வாய்ப்பிருந்தது. இருப்பினும் உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனையால் அவற்றை செயற்படுத்தவில்லை என பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சாட்சியமளித்துள்ளார்.

இதன்போது குறிப்பிட்ட முன்னாள் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் லொஹான்ரத்வத்தே'வடரட்டசிறைச்சாலை கைதிகளை தாக்குதலுக்காக கொண்டு வரவில்லை என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன் ' – என்றார்

லொஹான் ரத்வத்தே இன்னும் சிறைச்சாலை விவகாரத்துறை அமைச்சர் என்பது எனக்கு தெரியாது. வடரட்ட சிறைச்சாலையின் கைதிகள் தாக்குத லுக்காக அழைத்து வரப்பட்டமை தொடர்பான தரவும், தாக்குதலை தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களின் தரவும் என்னிடம் உள்ளன. எவ்வாறு இல்லை என்று குறிப்பிட முடியும். திட்டமிட்ட வகையில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## பதுளை எம்.பியின் வீடு மீது தாக்குதல்; சந்தேகத்தில் ஐந்து பேர் கைதாகினர்!

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரது வீடு தாக்கப்பட்டு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பாக, விசாரணைகளைமேற்கொண்ட பண்டாரவளைப் பொலிஸார் ஐந்து பேரை, கைது செய்துள்ள நிலையில் மேலும் பலர் தேடப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டியாராய்ச்சியின் வீடே, இவ்வாறு தாக்கி சேதப்படுத்தப் பட்டது. கடந்த 9 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து பண்டாரவளை மாநகரில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர், அங்கு கூடிய கும்பல், மேற்படி நாடாளுமன்ற உறுப்பினின்வதிவிடம்அமைந்துள்ள பகுதிக்கு ஊர்வலமாக சென்று, அவரது வீட்டைத் தாக்கி, பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, விசாரணைகளைமேற் கொண்ட பண்டாரவளைப்பொலிஸார், ஆரம்பக்கட்டமாக ஐவரைக் கைது செய்து, விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். மேலும் சிலர் தேடப்பட்டும் வருகின்றனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களின் விசாரணைகள் நிறைவுற்ற பின்னர், அவர்கள், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவரென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# புதிதாக தான் பிழை விடுங்களேன்!

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

இனப்போர் முடிந்து இன்னுமோர் ஆண்டு உருண்டோடிவிட்டது. ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் இனம் இன்னமும் ஆண்டுக்கு இரண்டு முறை நினைவேந்தல் நிகழ்ச்சிகளை நடத்தி வருவதுடன் தனது கடமையை முடித்துக் கொள்கிறது. அவ்வப்போது, காணாமல் போனோரின் பெயரில், வடக்கிலும் கிழக்கிலும் போராட்டங்களை நடத்துகிறது. இது தவிர, காணி அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை என்றும் அவ்வப்போது, நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்புகிறது.

இவற்றிற்கு அப்பால் சென்று, அரசியல் தீர்வை பெறுவதற்கு, தமிழ் அரசியல் கட்சிகள், சர்வதேசத்தை அண்டியே அரசியல் செய்கின்றன எனலாம். அதிலும், அண்டை நாடான இந்தியாவா அல்லது அதியுயர் சக்தியான அமெரிக்காவா, என்பதிலும் அவ்வப்போது குழப்பம் நிலவுகிறது. என்றாலும், வருடத்திற்கு இரு முறை, ஜெனிவாவில் கூடும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டங்களில் தங்களுக்கான நல்ல முடிவு கிடைக்கப் போகிறது என்று காத்து நிற்கின்றன.

இந்த பின்னணியில், ஒட்டு மா, கொய்யா போன்ற மரங்களை போல தோற்றமளிக்கும் தற்போதைய ஒட்டு அரசிடம் இருந்து தமிழ் மக்கள் என்ன எதிர்பார்க்க முடியும்? அல்லது எதிர்பார்க்க வேண்டும்? கரணம் தப்பினால் மரணம் என்று ஒவ்வொரு நாளையும் தள்ளிக்கொண்டு போகும் இந்த அரசிடம் அடித்துப்பிடித்து எந்த மாதிரியான அரசியல் தீர்வை தமிழர் தரப்புப் பெற முடியும்? அதற்குக் கொடுக்க வேண்டிய விலை எதுவாக இருக்கும்?

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவர் தலைமையிலான இந்த அரசு எத்தனை நாள் தாக்கு பிடிக்கும் என்று தெரியவில்லை. ஆனால், அடுத்த செப்டெம்பர் ஜெனிவா கூட்ட நேரத்தில், இந்த அரசு தொடருமேயானால், அப்போது, போர்க்குற்றங்கள்மற்றும்பொறுப்புக்கூறல்விடயங்களில் சர்வதேசத்தின் கருத்து மற்றும் முடிவு என்னவாக இருக்க முடியும்? அதற்கு, தமிழர் தரப்பின் எதிர்வினை எதுவாக இருக்கும்?

### நோகாமல் அடித்து.. அழாமல் அழுது...!

தமிழர் தரப்பை பொறுத்தவரை, ஜனாதிபதி கோட்டாபயவும் அவரது சகோதரர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் போர் குற்றங்கள் இழைத்தவர்கள் அல்லது அவ்வாறு குற்றம் செய்த இராணுவ வீரர்களையும் அதிகாரிகளையும் முனைந்து பாதுகாத்து வருபவர்கள். அவர்கள் ஆட்சியில் இருக்கும் காலம் தோறும், ஜெனிவா கூட்டங்களில், சர்வதேசத்தின் நிலைப்பாடுகளை தொடர்ந்து எதிர்த்தே வந்துள்ளனர்.

ஆனால், ரணில் நிலைமை அவ்வாறல்ல. கடந்த 2015 - 19 காலகட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அரசில் பிரதமர் பதவி வகித்த ரணில், விலாங்கு மீன் போன்று ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். அவருடைய செயல்திட்டத்திற்கு வடிவு கொடுத்து செயல்படுத்தியவர் முதல் மூன்று ஆண்டுகள் வெளியுறவு அமைச்சராக இருந்த மறைந்த மங்கள சமரவீர.

அந்த திட்டத்தின் படி, சர்வதேசம், இலங்கையை நோகாமல் அடிக்கும். இலங்கையும் மறு பேச்சு இல்லாமல், அழாமல் அழும். அவ்வாறு தான், ஜெனிவாவில், மேற்கு நாடுகள் முன்வைத்த தீர்மான நகலை, இலங்கை அரசும் ஆதரித்து, இணை அனுசரணை நாடாகச் சேர்ந்து கொண்டது. அந்த அரசு ஆட்சியில் இருக்கும் காலம் வரை, சர்வதேசமும் இலங்கை போர் குற்றங்களை கிடப்பில் போட்டுவிட்டது.

ஆனால், ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு திரும்பி வந்த பின்னர், போர் குற்றங்கள் தீர்மானத்தை தூசி தட்டி எடுத்து, ஜெனிவாவில் அதற்கு புதிதாக கை - கால்கள் வைத்து, அபூர்வ ஜந்துவாக காட்டியது. இந்த பின்னணியில், மீண்டும் ரணில் பிரதமராகி உள்ள நேரத்தில், சர்வதேசம் இலங்கை விடயங்களை எவ்வாறு கையாள போகிறது?

இந்த பின்னணியில், குறிப்பாக, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் ஆளுமை உள்ளவராக சித்தரிக்கப்படும் தற்போதைய ரணில் தலைமைக்கு மீண்டும் நெருடல் கொடுக்குமா? அல்லது, பழைய பல்லவி பாடி, இலங்கை அரசை மீண்டும் இணை அனுசரணையாளராக அணைத்துக் கொள்ளுமா? இது குறித்து கோட்டாவின் நிலைப்பாடு என்னவாக இருக்க முடியும்?

### எல்லாமே தலை கீழ்

போர் குற்றங்கள் போன்ற விடயங்களுக்கு அப்பால் சென்று நோக்கினால், தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்த அரசியல் தீர்வு என்னவாயிற்று? தற்போதைய அரசியல் நெருக்கடி தோன்றுவதற்கு முன்னர், தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி கோட்டாவின் அழைப்பினை ஏற்று, அவரை சந்தித்தமை இன்று வரலாறாகிவிட்டது.

அன்றைய காலகட்டத்தில், கோட்டா, புதிய அரசியல் யாப்பு வரைவின் தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு தயாரானதும், குறிப்பிட்ட விடயங்கள் குறித்து மீண்டும் கூடிப் பேசலாம் என்று கூறினார் எனச் செய்தி வெளியானது. ஆனால், அடுத்தடுத்த நாள்களில் நாட்டின் அரசியலே தலை கீழாகி விட்டது.



இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், முன்பு ரணில் பிரதமராக இருந்த காலத்தில், நாடாளுமன்றமே அரசமைப்பு உருவாக்க சபையாகவும் தன்னை மாற்றிக் கொண்டு, புதிய யாப்பிற்கான ஒரு நகல் வரைவைத் தயார் செய்திருந்தது. அதனை முடிவு செய்வதில் கூட்டமைப்பின் சுமந்திரனும் முக்கிய பங்காற்றினார். அதைவிட முக்கியமானது, அவ்வாறான வரைவு, கூட்டமைப்பிற்கு ஏற்புடையதாக இருந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

இந்தப் பின்னணியில், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை சரியான முறையில் பயன்படுத்தி, அந்த பழைய வரைவையே முன் வைக்க வேண்டுமென்று, கூட்டமைப்பு அரசிற்கு அழுத்தம் கொடுக்குமா? அல்லது, கோட்டாவின் புதிய வரைவின் அடிப்படையில் மீண்டும் பேச்சுகளைத் தொடங்குமா? இவை இரண்டையும் விட முக்கியமாக, ஜனாதிபதி கோட்டாவோ, பிரதமர் ரணிலோ, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து பேசுவார்களா? அல்லது பேச்சுத் தான் நடத்துவார்களா?

இவ்வாறான சந்தேகம் பிறக்க காரணம் இருக்கிறது. கடந்த செவ்வாய்க் கிழமை, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாவை எதிர்த்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரியவர்களில் கூட்டமைப்பின் சுமந்திரன் முக்கியமானவர். அவ்வாறு நாடாளுமன்றம் கண்டனத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்து விவாதத்தைத் துவங்கியவரும் சுமந்திரனே.

அத்தகைய அரசியல் முன்னெடுப்பு தோல்வியில் முடியும் என்ற பிரதமரின் அறிவுறுத்தலை புறக்கணித்தவரும் சுமந்திரனே. அதற்கு அப்பால் சென்று, எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதியை எதிர்த்த கண்டன தீர்மானம் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படுமாயின், அதனை இதே வழியில் சென்று ஆளும் கட்சியினர் தடுக்க முடியும் என்றும் ரணில் அறிவுறுத்தினார் எனவும் செய்தி வெளியாகி உள்ளது.

இதன் பொருள் என்ன? கோட்டாபயவை ஜனாதிபதி பதவியில் இருந்து தூக்குவதற்கான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அவரை எதிர்க்கும் தரப்பினருக்கு இல்லை. இப்போது ரணில் கோடிட்டு காட்டிய உத்தியை பயன்படுத்தி, அரசு தரப்பு செயல்பட்டால், கோட்டாவை எதிர்த்த வெறும் கண்டன தீர்மானம் கூட நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது. அவ்வாறு விவாதப் பொருளாகி, வாக்களிப்பு நடந்தாலும், அதனை அரசு தரப்பு இலகுவாகத் தோற்கடித்துவிடும்.

கடந்த செவ்வாய்க்கிழமை, சுமந்திரன் தரப்புப் பிரேரணையை 119 - 68 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்த போதே, அரசு தரப்பிற்கு தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பது உறுதியாகிவிட்டது. அதிலும் குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷ, அவரது மகன் நாமல் ஆகியோர் உட்பட 38 உறுப்பினர்கள் அன்று நாடாளுமன்ற நிகழ்வுகளில் பங்கு பெறவில்லை என்ற உண்மையும் எதிர்க்கட்சியினரை உறுத்தும்.

அதற்காக, அந்த 38 உறுப்பினர்களும் அரசு ஆதரவாளர்கள் என்பதல்ல பொருள். அதில் கணிசமானோர் அரசு ஆதரவாளர்கள் என்பதே உண்மை.

### தனிப்பட்ட முடிவல்ல

இதில் எந்தவொரு முடிவும் சுமந்திரனின் தனிப்பட்ட முடிவல்ல. மாறாக, அவை, அவர் சார்ந்த கூட்டமைப்பின் முடிவே. அந்த வகையில், இந்த அரசிற்கு இக்கட்டு கொடுக்கும் வகையில் இத்தனையும் செய்துவிட்டு, அவர்களிடம் இருந்து இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு திட்டத்தை எதிர்பார்க்க முடியுமா? அதிலும் குறிப்பாக, தமிழர் ஆதரவு என்று கருதப்படும் ரணில், பிரதமராக பதவியேற்றமையை சுமந்திரன் முதலானோர் கண்டித்துவிட்டு, அவரிடமிருந்து நல்ல முன்னெடுப்புகளை எதிர்பார்க்கலாமா?

கடந்த இரண்டு மாத காலமாக, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் பின்னடைவுகளை, குழப்பங்களை கூர்ந்து நோக்கிவரும் உலக நாடுகள் மற்றும் அவற்றின் மக்கள்,ஊடகங்கள் அனைத்திற்குமே, ஜனாதிபதி கோட்டாவை ஒரு தமிழ் எம்.பி. எதிர்த்தார் என்பது மட்டுமே மனதில் உறைந்துள்ளது. அந்த ஜனாதிபதிக்கு பெருவாரியான சிங்கள இன நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர் என்பதும் அவர்களுக்குப் புரிந்தே உள்ளது.

இத்தகைய சர்வதேசத்தவரின் அரைகுறை புரிதல் அடிப்படையில், இது இனவாத அரசியலாக இப்போது அரங்கேறியுள்ளது. அதாவது, நாட்டின் பொருளாதாரம் பின்னடைந்துள்ள நிலையில், தமிழர் தரப்பு, நாட்டின் பிரச்சினைகளை முன்னிறுத்தி, அரசிற்கு ஆதரவு தெரிவிக்காமல், தங்கள் தரப்பின் இனவாத அரசியலையே முன் வைத்துள்ளனர் என்ற ஒரு கருத்து தற்போது நிலவுகிறது. அந்த வகையில், கோட்டா தலைமைக்கு எதிரான கண்டனப் பிரேரணையை, சஜித் கட்சி தலைவர்கள் யாரையாவது முன் மொழியச் செய்து, கூட்டமைப்பு பின்னால் நின்று பக்கவாத்தியம் மட்டும் வாசித்திருந்தால், அதன் குறித்த சர்வதேசத்தின் புரிதல் வேறு மாதிரி இருந்திருக்கும்.

### புதியதொரு மனநிலை

கடந்த மே 9 திங்கட்கிழமை, நாடு முழுவதும் அரங்கேறிய தீ வைப்பு சம்பவங்கள், சிங்கள மக்களிடையே புதியதொரு மனநிலையைத் தோற்றுவித்துள்ளதாக கருத இடமிருக்கிறது. அன்று, கொழும்பு, காலி முகத்திடலில், அமைதியாக தங்களது அரசு எதிர்ப்பு போராட்டத்தை நடத்தியோரைக் கண்மூடித்தனமாக தாக்கியவர்கள், ராஜபக்ஷ ஆதரவாளர்கள் என்பது உறுதி.

ஆனால், அதனைத்தொடர்ந்து, அடுத்த சில மணித்தியாலங்களில், கொழும்பு தவிர்த்த தென்னிலங்கையின் பிற பகுதிகளில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 78 பேரின் வீடுகள், மோட்டார் வாகனங்கள் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன. அந்தப் பட்டியலில் அனைத்து ராஜபஷக்களும் அடங்குவர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வங்குரோந்து நிலையை அடைந்துள்ள இலங்கை; அமெரிக்க பொருளாதார நிபுணர் கடும் எச்சரிக்கை

இலங்கையில் உயர் பணவீக்கத்தால் நாட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பேராசிரியர் ஸ்டீவ் ஹென்கே தெரிவித்துள்ளார்.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான ஹென்கே இலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அறிவிக்கப்பட்ட ஆண்டு பணவீக்கம் 21.5 சதவீதம் என்ற போதிலும், அவரது அளவீடுகளின்படி உண்மையான பணவீக்கம் 132 சதவீதம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்மைய, அதிகாரபூர்வ பணவீக்க விகிதத்தை விட உண்மையான பணவீக்க விகிதம் 6 மடங்கு அதிகமாக உள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய உயர் பணவீக்கம் ஒரு பொருளாதாரப் பேரழிவு. இதனால் பணக்காரர்களை விட ஏழைகள் அதிகம் பாதிக்கப்படுவதுதான் இங்கு உண்மையான பிரச்சினை என பேராசிரியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இறுதியில் அரசியல் பிரச்சினையே உருவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் தற்போதைய நிலைவரப்படி நாடு வங்குரோந்து நிலையை அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. அடுத்து வரும் நாள்கள் மிகவும் மோசமானதாக இருக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# துமிந்த திஸாநாயக்க எம்.பியின் கைத்துப்பாக்கியை காணவில்லை!

## பொலிஸில் முறைப்பாடு

அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டில் இருந்த 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கி ஒன்று காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி பெற்ற குறித்த கைத்துப்பாக்கி காணாமல் போயுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரரால், அநுராதபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் தீ வைக்கப்பட்டது. இதன்போதே குறித்த கைத்துப்பாக்கி காணாமல்போயுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்கவின் வீட்டில் இருந்து 60 பவுண் தங்கம் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களின் போது, அவரது வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டிருந்த நிலையில், இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மைத்திரிக்கு எதிரான மனுவில் பிரதிவாதியாகப் பிரதமர் ரணில்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு மஹாகமசேகர மாவத்தையில் வீடொன்றை வழங்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்தை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எல்.டி.பி. தெஹிதெனிய, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதற்காக மனுதாரர்களுக்கு ஜூன் 29 வரை உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

# புதிதாக தான் பிழை ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய சம்பவத்தை குறித்த அனைத்து தரப்பு கண்டனங்களும் காலிமுகத்திடல் தாக்குதலை ஒட்டியே இருந்தன. ஆனால், அடுத்தடுத்த நாள்களில், தீவைப்பு சம்பவங்களின் தாக்கம் உள்வாங்கப்பட்டதும், சிங்கள மக்கள் மற்றும் அரசியல் தலைமைகளின் எண்ண வோட்டத்தில் மாறுதல் தோன்றியுள்ளது. இத்தனை தூரம் வெறி பிடித்து, தங்கள் மத்தியில் உலாவும் அந்த குழுவினர் யார் என்ற சந்தேகமும் அதனை தொடர்ந்து கவலையும் தோன்றி உள்ளன.

சிங்கள மக்களை பொறுத்தவரையில், நரை விழுந்த தலைமுறையினர், கடந்த 1971 மற்றும் 1987 ஆண்டுகளில் அரங்கேறிய ஜே.வி.பி. சார்ந்த வன்முறை சம்பவங்களை மறந்துவிடத் தயாரில்லை. அதன் தோன்றும் பய பீதி அவர்களை நின்று, நிதானித்து செயலாற்ற ஊக்குவிக்கத் துவங்கி உள்ளது. எப்போது ஜே.வி.பி. மீது அவர்கள் எண்ணம் பதிகின்றதோ, அன்றே, விடுதலை புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒட்டி தமிழர் தரப்பு என்று அவர்களது எதிர்மறை எண்ணவோட்டம் தொடரும்.

### இறப்புகள், இழப்புகள்

இனப்போர் முடிந்த நினைவு நாள் அன்று நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழர்களுக்கு பதின்மூன்றாவது திருத்தத்திற்கு உட்பட்ட அதிகார பகிர்வுகளை வழங்க வேண்டும் என்று பேசினார். இனப்போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களை நினைவு கூர்ந்த அவர், தமிழர் தரப்பு இறப்புகள், இழப்புகள் குறித்து வாய் திறக்கவில்லை.

தமிழர் தரப்புகள் எவ்வளவு தூரம் குற்றம் சாட்டினாலும், குறை கூறினாலும், இது தான் உண்மை நிலைமை. அதாவது, தமிழர் மத்தியில் தமிழ் இனவாத அரசியலை எதிர்த்துக் கருத்து கூறிவிட்டு, அரசியல் செய்ய முடியாது. தேர்தல்களில் வெற்றிபெற முடியாது. அது போன்றே, சிங்கள பேரினவாதிகள் மத்தியில், தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவிட்டு, அங்கு அரசியல் செய்து குப்பை கொட்ட முடியாது.

அப்படி என்றால், இதற்கு வேறு வழி என்ன? விடை தான் என்ன? ஒன்றில், தவறான அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து விட்டு, பின்னர், மீண்டும் பிழை விட்டோம் என்று கூறி தங்களைத் தாங்களே ஆறுதல் படுத்திக் கொள்வது. அல்லது, புதிய நகர்வுகளை முன்னெடுத்து, இன்றைய அரசோடும், ஏன், பிற தமிழர் மற்றும் சிங்கள - முஸ்லிம் தரப்புகளோடும் பேச்சுகளை முன்னெடுத்து, ஓர் இணக்கப்பாட்டுத் தீர்வை நோக்கி நகர்வது.

இதில், வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் அரசியல் மற்றும் சமூகத்தையும் உள்ளடக்கிய விடயம். மற்ற அனைத்து விடயங்களும் கூட உள்நாடு சார்ந்த பிரச்சினைகளே. சர்வதேசத்தை அண்டி அரசியல் செய்து அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளலாம் என்று நினைப்பது, தமிழர் அரசியல் தலைமைகள், தங்களையும் ஏமாற்றிக் கொண்டு, தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்குச் சமம்.

தமிழர் தலைமைகள் ஆண்டாண்டுகளுக்கு பிழை விட்டு அரசியல் செய்து வந்துள்ளனர். அதில் தவறில்லை என்றே வைத்துக் கொள்வோம். எப்போதாவது, விடுதலை புலிகள் இயக்கம் போன்று, புதிதாகத் தான், சரித்திர பிழை விட்டு, சரித்திரத்திலாவது இடம் பிடியுங்கள்! பழைய தவறையே புதிய முலாம் பூசி ஒரு மேலும் ஒரு சுற்று விடாதீர்கள்.

### ஐஸ் வைப்பு அரசியல்

இந்தியாவில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறையில் இருந்த பேரறிவாளனை நாட்டின் உச்சநீதிமன்றம் 30 ஆண்டுகளுக்கு பின்னர் விடுதலை செய்துள்ளது. இதனை தொடர்ந்து, மீதமுள்ள ஆறு சிறைவாசிகளையும் தமிழ்நாடு அரசே விடுதலை செய்யலாம் என்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது. இது முற்றிலும் முடிவுமாக சட்ட பிரச்சினைகளை மையமாக வைத்து மட்டுமே முடிவு செய்யப்பட்ட தீர்ப்பு. இதில் அரசியலுக்கு இடமில்லை.

இலங்கை தமிழர் தரப்பை பொறுத்தவரை, தங்களது உற்றார், உறவினரைக் கொன்ற இராணுவத்தினருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்றே சர்வதேசத்திடம் மன்றாடுகிறார்கள். அதே தராசில் வைத்து பார்த்தால், ராஜீவ் காந்தியின் குடும்பத்தினர் என்றல்ல, அவருடன் கொல்லப்பட்ட மேலும் 16 பேரின் குடும்பத்தினரிடமும் கருத்துக் கேட்டு அவர்களது ஒப்புதலை பெற்ற பின்னரே, பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்திருக்க வேண்டும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை தமிழ்நாட்டின் திராவிட அரசியல் ஆளுமைகள் தங்களது வெற்றியாக கொண்டாடத் துவங்கி உள்ளன. அதை விட முக்கியமாக, இந்த தீர்ப்பிற்கு, எதிரணியில் உள்ள திராவிட கட்சி எதுவுமே செய்யவில்லை என்பது போன்ற எண்ணத்தை உருவாக்க முயல்கின்றன. இது தமிழ் நாட்டு அரசியலின் உள்வீட்டு விவகாரம்.

இதில், இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகள் எதுவும் முதல் எடுக்க தேவையில்லை. குறிப்பாக, தி.மு.க. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அல்லது அண்ணா தி.மு.கவின் அப்போதைய, இப்போதைய தலைமைகளுக்கு ஐஸ் வைக்க முயல வேண்டாம். இப்பொழுதே, ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் முதல்வர் ஸ்டாலினிடம் நேரம் ஒதுக்கக் கேட்டுக் கடிதம் எழுதியுள்ள இலங்கைத் தமிழர் மற்றும் மலையகத் தமிழர் தலைவர்களின் பட்டியல் நீளமானது என்று கேள்வி.

அதே போல், இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த தினத்தை இனப்போர் முடிந்த நாளோடு முடிச்சுப் போட்டு, இலங்கையில் தமிழ் தரப்பினர் யாருமே கணக்குப் போட வேண்டாம். இவ்வாறு, தப்புதப்பாக அரசியல் கணக்கு போட்டே, தமிழ் சமூகம் தங்களது நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை தொலைத்தாகிவிட்டது. இனி மேலாவது, தற்காலத்தில் மட்டுமே நின்றுகொண்டு, தங்களது அரசியலை தங்கள் நாட்டிற்குள்ளேயே நிறுத்திக்கொண்டு, உள்நாட்டு அரசியல் தலைமைகளுடன் பேசி முடிவு செய்ய வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய செயல்பாடு மட்டுமே, இன்றைய தமிழ் இளைய தலைமுறை, நாளை நல்ல எதிர்காலத்தை நோக்கி பயணம் செய்ய வழி வகுக்கும். மீதி அனைத்து முறைகளும் வெட்டி பேச்சு, வீண் பேச்சாக மட்டுமே முடியும்.

இதற்கு மாறாக, காலிமுகத்திடலில் இனப்போர் நினைவு நாள் தமிழர் தரப்பில் அனுசரிக்கப்பட்டது, முந்தைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இறந்துபோன தமிழர்களுக்காக தனது வீட்டில் விளக்கு ஏற்றினார் என்று கூறுவதெல்லாம், ஒரு நாள் கூத்து. காலி முகத்திடலில் கூடியுள்ள கூட்டம், கொழும்பு நகரின் நடுத்தர அறிவு ஜீவிகளின் முன்னெடுப்பு. குறிப்பாக விடுதலை புலிகள் இயக்கம் இல்லாததோடு அவர்கள் தமிழர் தரப்பிற்கு எதிராக இல்லை. அதே சமயம், அவர்களது ராஜபக்ஷ அரசியல் புதியதொரு வடிவம் பெற்றுள்ளது. அவ்வளவு தான்!

# வங்கிகளின் வட்டி விகிதம் மேலும் உயர்வதற்கு வாய்ப்பு

இலங்கை வங்கிகளின் வட்டி விகிதம் மேலும் உயர வாய்ப்புள்ளதாக சந்தை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான தீர்மானம் மத்திய வங்கியின் ஆளுநரால் அறிவிக்கப்படும் என தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

2022 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை மீளாய்வை ஆரம்பிக்கும் வகையில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நந்தலால் வீரசிங்க இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த ஏப்ரல் 08ஆம் திகதி, முதல் தடவையாக கூடியது.

இலங்கை மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் முறையே 700 அடிப்படை புள்ளிகளாக 13.50 சதவீதம் மற்றும் 14.50 சதவீதமாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையின் வரலாற்றில் ஒரு சந்தர்ப்பத்தில் கொள்கை வட்டி விகிதங்களில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# 4 ஆயிரம் ரூபா தொட்ட விறகு!

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

பெருந்தோட்டப்பகுதியில் விறகு, உரம் தட்டுப்பாடு காரணமாக தேயிலை உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்து வருவதாக பெருந்தோட்டத்துறை நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தற்போது டீசல் விலையேற்றம் காரணமாக விறகின் விலை அதிகரித்துள்ளதுடன் சில தோட்டங்களுக்கு போதுமான அளவு விறகு கிடைப்பதில்லை என்றும், இதனால் தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு முன்பு விறகு 2,000 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டதாகவும், தற்போது விறகு 4,000 ரூபாவாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேயிலை தொழிற்சாலை பொறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகப்பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு கடந்த காலங்களில் யட்டியன்தோட்டை, கித்துல்கலை, பலாங்கொடை, மொறட்டுவ, இரத்தினபுரி உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து விறகு பெற்றுக்கொள்ளப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக விறகு வியாபாரிகள் தொழிற்சாலைகளுக்கு விறகு விநியோகம் செய்வதை நிறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# படிப்படியாய் மறைந்து போகும் பழந்தமிழர் வாழ்வும் பழஞ்சோறும்...

- றே.பூமகள்- (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்)

நம் முன்னோர்கள் வியர்வை நிலத்தில் சிந்த தாமே வயல் உழுது, நெல் விதைத்து, அறுவடை செய்த கைக்குத்தரிசியில் மதிய உணவாக சோறு சமைத்து உண்டமை மட்டுமின்றி அந்தச் சோற்றில் மீதம் வைத்து அடுத்தநாள் உண்ணும் பல சத்துள்ள ஆரோக்கிய உணவாக பழஞ்சோற்றை தயாரித்தனர்.

சுத்தமான தண்ணீரை முதல் நாள் சோற்றில் நிறைய ஊற்றி, அதை மறுநாள் எடுத்து உப்பு அளவாக இட்டு, சின்ன வெங்காயம் சிறு துண்டாக்கிப் போட்டு, காரத்திற்காக பச்சை மிளகாய் அரிந்து போட்டு, நன்கு பிசைந்து வெறும் வயிற்றில் காலை உணவாகப் பழந்தண்ணீர் குடித்தவர்கள் ஒரு பகுதியினர். இன்னுஞ் சிலர் பழஞ்சோற்றில் சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் சிறுதுண்டாக்கிப் போட்டு, நன்கு பிசைந்து மோரும் சிறிது விட்டு, அளவாக உப்பிட்டு, ஊறுகாயுடன் காலை உணவாக வயிறு நிரம்ப களை தீர குடித்தார்கள்.

தேங்காய் துருவி முதல் பாலைப் பிழிந்து பழஞ்சோற்றில் விட்டு, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் சிறுதுண்டாக்கிப் போட்டு, நன்கு பிசைந்து கருவாடு சுட்டுக் கடித்து வாய்க்கு இதமாக பதமாக வெறும் வயிற்றில் காலை ஆகாரமாக குடித்து வந்தவர்களும் இருந்தார்கள்.

நம் முன்னோர்கள் தயாரித்த இப் பழஞ்சோற்றில் பல மருத்துவ குணங்கள் பொதிந்திருந்தன. அவர்களின் உடல் நலத்திற்கும் மன நலத்திற்கும் உந்துசக்தியாக இச்சாதம் இருந்தமை எல்லோராலும் தற்போது வியந்து பேசப்படுகிறது.

இப்பழஞ்சோற்றில் B6, B12 என்ற விற்றமின்கள் உருவாகுகின்றன. இரவு முழுதும் ஊற்றி வைக்கப்படும் நீர் சோற்றுடன் சேர்ந்து பல பற்றீரியாக்கள் பெருக்குகின்றமையால் அவை சிறு குடலுக்கு நன்மை செய்யும் பல தொழிற்பாடுகளில் ஈடுபட்டு, உணவுப் பாதையை ஆரோக்கியமாக வைத்திருந்தன என மருத்துவம் கூறுகின்றது.

மேலும் பழஞ்சோற்றில் சிறிய வெங்காயத்தை நம் முன்னோர்கள் சேர்த்து உண்டதால் சிறிய வெங்காயம் நோய் எதிர்ப்பு சக்தியை அபரிமிதமாகப் பெருக்கி, எந்தக் காய்ச்சலும் அவர்களை அணுகாது ஆரோக்கியமாக இருந்தனர் என்றும் மருத்துவ உலகம் சுட்டுகின்றது.



காலையில் நம் முன்னோர்கள் பழஞ்சோற்றினை குடித்து வந்தபோது அவர்களின் உடல் லேசாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்துள்ளது. உடலுக்கு அதிகமான சக்தியை கொடுத்து அவர்களால் எந்த கடின வேலையினையும் இலகுவாக தனியாகவோ குழுவாகவோ இணைந்து ஆற்றக் கூடிய வல்லமையை அளித்து நாள் முழுக்கச் சோர்வின்றி வேலை செய்ய இது உதவியாக இருந்தது என்பதே உண்மை.

தொடர்ந்து பழஞ்சோற்றினை குடித்து வந்த பலருக்கு இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் உடல் எடையும் குறைந்து எந்த வேலையையும் ஆற்றக்கூடிய வகையில் ஆரோக்கியமாக இருந்தார்கள் என மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

பெண்களைப் பொறுத்தவரைக்கும் தொடர்ந்து பழஞ்சோற்றினை குடித்து வந்தவர்கள் அதிலுள்ள போலிக்கமிலம் என்னும் சிறப்பான சத்தினால் ஆரோக்கியம் பெற்று பெரும்பாலானோர் குழந்தைகளை பெற்றுக் கொண்டவர்களாகவும் மலட்டுத்தன்மை மிக அரிதாக இனங்காணப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்.

முதல் நாள் ஊற்றப்பட்ட தண்ணீர் மறுநாள் பழைய சோற்றுடன் சேர்ந்து குடிக்கும் போது உடல் சூடு தணிக்கப்பட்டு உடற்பருமன் கொண்டவர்களாகவும், குடற்புண் எனப்படும் அல்சர் நோய் இல்லாது மருந்து மாத்திரை போட்டுக் கொள்ளாதவர்களாகவும் இருந்தனர். இவை மட்டுமன்றி பழஞ்சோற்றில் உள்ள நார்சத்து மலச்சிக்கல் இல்லாமல் முன்னோர்களின் உடலை சீராக இயங்கச் செய்திருந்தது என்பது தெளிவு.

ஒவ்வாமை (அலர்ஜி), அரிப்பு போன்ற நோய்கள் கூட அவர்களுக்கு சட்டென்று சரியான நிலைமை காணப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக நோய் எதிர்ப்பு சக்தி பழஞ்சோற்றில் அதிகளவில் கிடைப்பதால் அவர்களுக்கு எந்த நோயும் அருகில்கூட அணுகாமல் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளாத சுகதேகிகளாக வாழ்ந்தனர் என்பது வரலாறு.

இன்றைய தலைமுறையில் பசிக்கும், ருசிக்கும் உணவு உண்பவர்களே அதிகம். சிறியவர் முதல் பெரியவர் வரை உடல் ஆரோக்கியம் பற்றி பெரிதும் சிந்திப்பதில்லை. குறிப்பாக காலை உணவுக்காக நாகரிகமான உணவுகளை உட்கொள்ளும் பழக்கத்தில் எல்லோரும் மூழ்கியுள்ளார்கள். இதனால் பல்வேறு விதமான நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர். உணவுப் பழக்கவழக்கங்களை முடிந்தவரை வீட்டில் தயாரிக்கும் உணவுகளுடன் சம்பந்தப்படுத்தி வாழக் கற்றுக் கொள்ள முன்வரவேண்டும். அதிலும் நம் முன்னோர்கள் பயன்படுத்திய உணவுப் பழக்கவழக்கங்களை தெரிந்து வைத்து பின்பற்றுவது சிறப்பான ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கும்.

இத்தகைய பல ஆரோக்கியங்களை அள்ளி வழங்கும் பழஞ்சோற்றினை இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு சிறுவயது முதலே வசதிக்கேற்றவாறு தத்தமது வீடுகளில் உள்ள பெரியவர்கள் மூலம் பழக்கப்படுத்திக் கொடுக்கும் பாரிய பொறுப்பு தமிழர்களாகிய எல்லோருக்கும் இருக்கின்றது. பழந்தமிழர் வாழ்வியலில் பொதிந்துள்ள பல அர்த்தங்கள் பொதிந்த பழக்கவழக்கங்களை மங்கி மறைய விடாது, கூடிய வரைக்கும் தொடர்ச்சியாகப் பேணி ஆரோக்கியமுள்ள சமுதாயத்தை கட்டி எழுப்புவோம்.

# கல்வியின் பயன்



**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின் (குறள் - 2)**

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

கல்வியின் பயன் என்ன? அதன் உள்ளார்ந்த நோக்கம் என்ன? கல்வியின் இறுதி இலட்சியம் என்ன? இது தொடர்பில் நாம் எப்போதாவது சிந்தித்திருக்கின்றோமா? அறிவை வள்ளுவர் நூலறிவு, வாலறிவு என இரு வகைப்படுத்துகிறார். நல்ல பல நூல்களைக் கற்பதன் வழியாகக் கிடைக்கப்பெறுவது நூலறிவு. நடைமுறை வாழ்வியலின் அனுபவத்தினூடாகக் கிடைக்கப்பெறுவது வாலறிவு. இந்த இருவகை அறிவையும் பெற்ற ஒருவன் தன்னை அறிவான். அதாவது, தன்னுள் நீக்கமற உறைந்துள்ள இறைவனை அறிவான்.

இவ்வகையிலே கல்வியின் பயன் என்பது, தன்னுடைய மீட்பிற்காகவும் நல்வாழ்விற்காகவும் கல்வியின் வழி தன்னை அறிதல். அதாவது, தன்னுள் நிறைந்துள்ள இறைவனை அறிந்து அவனைப் பணிதலாகும். இதுவே இந்தியத் தத்துவ ஞானிகளும் வேதாந்திகளும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும்.

'ஆத்மனோ மோக்சார்த்தம்
ஜகத் ஹிதயாச்ச'

**- சி. குருபரநாத் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்)**



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

தேரதனி லேறி வந்த தேககளை தீர கங்கை
நீரதனி லாடி வந்த - குமரோனே
சீதமறை யோரி யம்பு வேதமத னூடு அந்த
சீலநதி ஏழும் வந்து - குடமூடே
சீரதுள ஆக மங்கள் பேசுவழி யேநி றைந்து
தேடிமன மேவி ரும்பு - அபிடேகம்
சீலமுட னேவ ழங்கி சீரணிக ளேபு னைந்து
தேசதுட னேம கிழ்ந்து - வருவோனே
வேரதென வேவி ளங்கு பாதமதை யேநி னைந்து
வேலனுனையேவணங்க-பெறுவோனோ?
வீறசுரர் பாற வன்று சீறிவரு வேலை சிந்து
வீரகுக னாகு கந்த - வடிவேலா
வாரணனி னோடு சண்டி ஈசனவன் சேர நின்று
வாகினொடு வீதி வந்த - முருகோனே
வாரழகி னோடு ஐந்து பேருமரு காக வந்து
வாரியருள் வீசு நல்லை - பெருமானே!

– கவிஞர் இராசையா குகதாசன் –

# சக்கராசனம் (சில்லுபோன்ற தோற்றம்)

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)




**செய்முறை**

படி 1. விரிப்பின் மீது கால்களை ஒடுக்கி மல்லாந்து படுக்கவும். கைகள் தலைக்கு மேல் நீட்டப்பட்டிருக்க வேண்டும். உடல் நேராக இருக்க வேண்டும்.

படி 2. முழங்கால்களை சேர்த்தபடி மடித்து குதிக்கால்களை புட்டத்துக்கு அருகில் மடித்து வைக்கவும். பின் உள்ளங் கைகளை இரு காதுகளின் பக்கவாட்டில் ஊன்றியபடி வைக்கவும்.

படி 3.மூச்சை இழுத்தவாறு உடலை மேல்நோக்கி தரையை விட்டு தூக்க வேண்டும். இரு உள்ளங்கால்களும் கைகளும் உடலைத் தாங்க வேண்டும். நன்றாக உடலை பின்புறமாக வளைக்கவும். உச்ச நிலையில் ஆழமாக சுவாசிக்கவும்.

படி 4.பின் மூச்சை வெளிவிட்டவாறு மெதுவாக 2 ஆம் நிலைக்கு வந்து முதலாம் நிலைக்கு (ஆரம்ப நிலைக்கு) வரவும்.

**பலன்கள் :** புஜங்கள், கெண்டைக் கால்கள், முழங்கால்கள், தொடைகள், கால், கை மூட்டுகள் என்பவை உறுதியாகும். முதுகு வளையும் தன்மை பெறும். கூன் முதுகு இல்லாமல் போய்விடும். ஆண்மை, பெண்மை, இளமை அதிகரிக்கும். மலட்டுத் தன்மை நீங்கும். நாரிப் பிடிப்பு, கழுத்து வலி, முதுகுவலி, சுவாசக் கோளாறுகள், மாதவிடாய், கர்ப்ப ரீதியான கோளாறுகள் சரி செய்யப்படும். பியூட்டரி, தைரொயிட், பராதைரொயிட், தைமஸ், பங்கிரியாஸ், அட்ரினல் முதலிய நாளமில்லா சுரப்பிகள் ஊக்கமடைகின்றன. சிறுநீரக, சுவாச, சமிபாட்டு தொகுதிகளுடன் தொடர்பான கோளாறுகள் நீங்கும்.

# இலங்கைக்கு உதவும் நெருக்கடி நிபந்தனையாக இறுதி போர் பொறுப்புக்கூறலை பாவிக்கவேண்டும்

## நினைவேந்தலில் வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு



நாட்டில் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு நிபந்தனைகளுள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் முக்கியத்துவமுடையதாக அமையவேண்டும் என பாதிக்கப்பட்ட இனத்தில் இருந்து தாம் கோரிக்கை விடுப்பதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் புதன்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எமது மக்கள் மீது தொடர்ச்சியாக அரச பயங்கரவாதம் பிரயோகிக்கப்பட்டே வந்துள்ளது.

சிங்கள மக்கள் போன்று நாட்டில் உரிமைகளுடன் நாமும் ஓர் தேசிய இனம் என்ற வகையில் வாழ வேண்டும் என்றே எமது இனம் அபிலாஷை கொண்டுள்ளது.

அரசியல் உரிமைகளைக் கேட்டு அஹிம்சை வழியில் போராடிய போது எமக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட அரச பயங்கரவாதமே ஆயுதப்போருக்கு வழிவகுத்தது. அரச படைகள் ஊடாக எமது சிறுவர்கள் வயோதிபர்கள் பெண்கள் என்ற பாகுபாடின்றி மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளோம். உலகம் மனித உரிமைகளுக்காகப் பாடுபடுகின்ற ஒரு சூழ்நிலையில் அத்தனை உரிமைகளும் அரசினாலேயே இலாவகமாக மீறப்பட்டுள்ளன. அரச படைகளால் எமது மக்கள் கடலிலும் தரையிலும் வெட்டியும் சுட்டும் வான் வெளி கொத்துக் குண்டு வீச்சிலும் எத்தனையே ஆயிரம் சிறார்கள் கொல்லப்பட்டுள்ளனர். பெண்களின் உரிமைகள் பற்றி உலகம் பேசுகின்றது. ஆனால் எத்தனை பெண்கள் யுத்த காலத்தில் அரச அனுசரணையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டுனர்.

அதுபோன்று தமிழ் மக்களை கொன்றழித்த கொலைக் குற்றவாளிகள் தண்டனைகள் வழங்கப்படாது அவர்களுக்கு அரச அந்தஸ்தளிக்கப்பட்டுள்ளது. அரச படைகளிடம் சரணடைந்த மற்றும் அரச படைகளால் கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களைத் தேடி தாய்மார் இன்றும் போராடுகின்றனர். எதற்குமே நீதி கிட்டவில்லை.

போரில் குழந்தைகளைக் கூட கொன்று குவித்த அரசிற்கு எதிராக போதுமான மனித உரிமை ரீதியிலான ஒழுங்குகள் பிரயோகிக்கப்படவில்லை என்பதை ஓர் இனமாக நாம் வெளிப்படுத்துகின்றோம். இந் நிலையில் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு வழங்க இணக்கம் காணப்படுகின்ற உதவிகள் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்புச் சொல்வதை உறுதிப்படுத்துவதுடன் தமிழ் மக்கள் மீது மீளவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறால் உறுதிப்படுத்துவதாகவும் எமக்கான தீர்வை முன்வைப்பதாகவும் அமையவேண்டும். - என்று தெரிவித்தார்.

# பொதுப்பணிக்கு தாலியை தானமாக வழங்கினார் காரைதீவுப் பெண்மணி!



## குவியும் பாராட்டுக்கள்

(காரைதீவு நிருபர் சகா)

பொதுப்பணிக்காக நிதிச்சேகரிக்கையில், தனது தாலியை தானமாக வழங்கினார் ஒரு வீரப்பெண்மணி.

இவ் உணர்ச்சிபூர்வமான சம்பவம், காரைதீவில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவின் வடகோடியிலுள்ள காணியொன்று மாற்றினத்தாருக்கு விற்கப்பட்டுவிட்டது. அதனை மீளப் பெறுவதற்காக காரைதீவு அனைத்து ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் உள்ளிட்ட பொதுப்பணிக்குழுவினர் களத்திலும், புலத்திலுமிருக்கக்கூடிய உணர்வுள்ள காரைதீவு மக்களிடம் நிதி சேகரிப்பீலிடுபட்டார்கள். லட்சக்கணக்கில் மக்கள் உணர்வுபூர்வமாகத் தாராளமாக நிதியுதவி வழங்கினர்.

காரைதீவு 8ஆம் பிரிவில் நிதி சேகரிப்பில் வீடுவீடு வீடாகச்சென்றபோது ஒரு பெண்மணி தானாக முன்வந்து 'எப்படியாவது அக்காணியை மீட்டெடுங்கள்' என உணர்வுபூர்வமாகக்கூறி தனது கழுத்திலிருந்த 10 பவுண் தாலியை கழற்றி குழுவினரிடம் கையளித்தார். நிதிசேகரிப்புக்குழுவினர் ஒருகணம் அதிர்ந்துபோனார்கள்.

காரைதீவு 8 ஐச் சேர்ந்த திருமதி சாமித்தம்பி சாந்தினி என்பவரே இவ்விதம் தனது தாலியை பொதுப்பணிக்காக வழங்கியவராவார். ஒரு விவசாயின் மனைவியான அவர், இருந்தும் காரைதீவார் என்ற உணர்வில் அக்காணி கட்டாயம் மீளப்பெறவேண்டும் மண் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உயரிய நோக்கில் அதனைக் கையளிக்கிறேன் எனக் கூறியுள்ளார்.

அறங்காவலர் ஒன்றியத்தலைவரும், கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தாவுமான இரா.குணசிங்கம் தலைமையிலான நிதிசேகரிப்புக்குழுவினர் அதனை முறைப்படி நன்றி தெரிவித்து பெற்றுக்கொண்டனர்.

தாலியை தானமாக வழங்கிய செய்தி காட்டுத்தீபோல ஊரெங்கும் பரவியது. மக்கள் அதிர்ந்துபோனார்கள். அதனையடுத்து நேரிலும் சமூகவலைத்தளங்களிலும் அந்தப் பெண்மணியின் ஊர்ப்பற்றை உணர்வை வியந்து வாழ்த்துக்கள் குவியஆரம்பித்துள்ளன.

புலம்பெயர்தேசத்திலுள்ள உணர்வாளர்களும் அந்தப் பெண்மணியை பாராட்டி கவிதைகளையும், கருத்துக்களையும்வெளியிட்டவண்ணமுள்ளனர். குறித்தகாணியை மீட்டெடுக்க தியாகத்துடன் பாடுபட்ட மண்மீட்புக்குழுவினருக்கும் பாராட்டுமழை குவிந்தவண்ணமுள்ளது.

ஊருக்கு வேலி போட தாலி வழங்கிய வீரப்பெண்மணியை எதிர்வரும் அம்மனின் குழுத்தி காலத்தில் பாராட்டவேண்டும் என மண்மீட்புக் குழுவினர் கருத்துரைத்துள்ளனர்.

அதுமட்டுமல்ல மண்ணை மீட்டெடுக்கஉதவிய உணர்வாளர்கள் அனைவரையும் பாராட்டவேண்டும் அதேவேளை குறித்த காணியை விற்றவர்களுக்கு ஊரால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

குறித்த காணி மே18 புதனன்று மாலை முறைப்படி உறுதி எழுதி மீட்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருளுக்காக நேற்றும் நீண்ட வரிசையில் மக்கள்!







யாழ்ப்பாண நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நேற்று பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டாம் என அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் நேற்று காலை முதல் எரிபொருள்களை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் கொள்கலன்களுடன் வாகனங்களுடனும் காத்திருந்தனர்.

இதனால் அப்பகுதியில் சிறிதுநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர் வேலாயுதம் காலமானார்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது லண்டனில் வசித்துவந்த சைவப் புலவர் பண்டிதர் செஞ்சொற்கொண்டல் கோசி. வேலாயுதம் லண்டனில் கடந்த புதன்கிழமை காலமானார்.

முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண யாழ்.பிராந்திய கல்விப்பணிப்பாளராகவும் வலம்புரி பத்திரிகையின் உருவாக்குநரும் முன்னாள் பிரதம ஆசிரியரும் யாழ் தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியராகவும் யாழ்.மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் முன்னாள் உபதலைவராகவும் தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகத்தின் முன்னாள் உபதலைவரும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முன்னாள் தலைவராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் பேரவை உறுப்பினராகவும் வட இலங்கை சங்கீத சபை முன்னாள் தலைவராகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினராக தந்தை செல்வா காலம் முதல் பணியாற்றியுள்ளார்.

நாடறிந்த பேச்சாளராகவும் இலக்கிய கர்த்தாவாகவும் கணித விற்பன்னராகவும் சோதிட விற்பன்னராகவும் திகழ்ந்தவர்.

லண்டன் விஞ்ஞானமாணி பட்டத்தினையும் தமிழ் நாடு சென்னை சித்தாந்த சமாஜத்தில் சைவப்புலவர் பட்டத்தையும் மதுரை தமிழ்சங்கத்தில் பண்டிதர் பட்டத்தையும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றினையும் பெற்றுக் கொண்டவர்.

நில அளவையாளராக கணித விஞ்ஞான ஆசிரியராக ஆசிரிய ஆலோசகராக அதிபராக கொத்தணி அதிபராக கோட்டக் கல்விப்பணிப்பாளராக யாழ் பிராந்திய கல்விப்பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

ஈழத்து இலக்கியப்பரப்பின் இலக்கிய ஆளுமை பேச்சாளன் நல்லாசான் கல்வியதிகாரி பத்திரிகையாசிரியர் நூலாசிரியர் சமய விற்பன்னர் சோதிடர் என பல்திறன் கொண்ட ஆளுமையை இழந்து தவிக்கின்றோம்.

ஆளுமையாளனின் இழப்பு எம்மை ஆழ்துயரில் ஆக்கியுள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**


# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -15**

ராஜபஷக்களின் அரசாட்சிக் காலங்களில் முள்ளிவாய்க்கால் பேரழிவுகளை நினவு கூர்வது மட்டும் தடுக்கப்பட்டது என்பதல்ல, அதையும் தாண்டி, தமிழர் தேசம் எங்கும் மீளாத் துயில் கொண்டிருந்த மாவீரர்களின் துயிலும் இல்லங்களும் கூடத் தேடித் தேடி சிதைத்து, சின்னாபின்னமாக்கி, சீரழிக்கப்பட்டன.



அவர்களின் ஆட்சியில், மறைந்த உறவுகளை நினைவு கூரும் உரிமைகள் கூட அவை விடுதலைப் புலிகளை மீளக்கட்டி எழுப்புவதாகும் என்று அர்த்தம் பண்ணி மறுக்கப்பட்டது.

ஜனநாயக அரசின் கீழ் நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குகின்றன எனக் கருதப்பட்டாலும் அவையும் பெருமளவு தடைகளை ஆதரித்தே உத்தரவுகளை தந்தன.



பதின்மூன்று வருடங்களின் பின் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இம்முறை முள்ளிவாய்க்காலில் மட்டுமல்லாமல், தமிழர் பகுதிகள் எங்கும், காலிமுகத்திடலிலும் கூட, முன்னெடுக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க கூட அதை அனுசரித்தார். அவர் காலத்தில் அவரது இராணுவ நடவடிக்கைகளாலும் பலர் அந்தரித்த சாவுகளை எதிர்கொண்டார்கள்.

இவை உணர்ச்சிகளோடும் உணர்ந்த மனநிலையிலும் அனுஷ்டிக்கப் படுவதற்கான தடை விலக்கல் புதிய பிரதமர் பதவியிலிருந்து ரணில் விடுத்த உத்தரவால் வந்தது. மரணித்தவர்களை நினைவு கூர்வது அவரவர் மதங்களின், தர்மங்களின் உரிமை, அதற்கு – அவரவர்களின் நினைவு கூறல் உரிமைக்கு – யாரும் தடையேதும் விதிக்கக் கூடாது என ரணில் அறிவித்தார்.

அவர் அப்படி மதங்களைக் கோடி காட்டி, தர்மங்களைப் பேசியமைக்கு யாழ் மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் தற்போதைய வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் அந்தரித்த சீவன்கள் தங்களது ஆத்மா சாந்தி அடையாமல் அலைந்து திரிவதும் அவர்களது சாபமும்தான் நாடு இன்று இந்த நிலைக்கு வந்தமைக்கு காரணம் என ரணிலுக்கு எழுதிய கடிதம்தான் பிரதமர் ரணிலின் சிந்தனையை தூண்டியது என்று பேசப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவும் கூடச் சிந்தித் தார். அது முள்ளிவாய்க்காலில் அந்தரித்த ஜீவன்கள் பற்றியது அல்ல. ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு அவரது மனைவி அலரி மாளிகைக்கு முன் நின்று தான் செய்த சூனியங்களை அலரிமாளிகையை நோக்கி வீசி 'மஹிந்தவும் அவரது குடும்பமும் நாசமாகப் போகும்' என்று சாபம் போட்டதால் ஏற்பட்ட பயத்தில் நேர்ந்த சிந்தனை அது. அதனால் தன் இருப்பிடமாக இருந்த அலரி மாளிகையை மாற்றி அலுவலகமாகத்தான் பாவித்தாராம் மஹிந்தர்.


ஆக மதப் பாரம்பரியங்களால் கட்டுப் படுத்தப்பட்ட அந்த மக்கள், இவை அவரவர்களின் செய்வினைகளின் விளைவே என்று கருதுகிறார்கள்.

நேற்றைய பத்தியில், எவ்வளவுதான் நேர்மையாகவும் பெருமையாகவும் தமிழ் தலைவர்கள் ஜனநாயக ரீதியாக, ஜன நாயகத்திற்காக செயபட்டிருந்தாலும் கூட, அதனால் தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுத் தந்தார்கள் என்று கேள்வி எழுப்பி இருந்தேன்.

இன்னொரு விதத்தில் பார்த்தால், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அந்தக் கேள்வி பொருந்தும். முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, பிரபாகரனும் கொல்லப்பட்டுவிட்டார் என இராணுவம் அறிவித்து, அவரது பூத உடலைக் காட்டி, வெற்றி. கொண்டாடிய போது மஹிந்தர் வெளிநாட்டிலிருந்து விமானத்தில் வந்து இறங்கி, சாஷ்டாங்கமாக விழுந்து மண்ணை முத்தமிட்டு, மண்ணை மீட்டு விட்டேன், நாட்டை மீட்டு விட்டேன், ஒற்றுமைப்படுத்தி விட்டேன், அதாவது ஒன்றாக்கி விட்டேன் எனச் செய்திகள் சொன்னார். சிங்கள மக்களுக்காக இந்த நாட்டை வென்று, பிரபாகரனை அழித்துவிட்டோம் என்று மஹிந்தர் மட்டுமல்லர், படைத் தளபதி சரத் பொன் சேகா, தற்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய போன்ற எல்லோரும் கைதட்டினார்கள்



எந்த மண்ணைத் தொட்டு மஹிந்த பெருமை பேசினாரோ, அந்த மண் அவரைக் கிழக்குக்கும் பின் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கும் ஓடிஒளியவைத்தது. அவருடைய சொந்த மாவட்டத்தி லேயே அவரது வீடும் சொத்துக்களும், ஏன் அவரது தாய், தந்தையாரின் நினைவிடங்களும் கூட சிங்கள மக்களால் நிர்மூலமாக்கப்பட்டன. அவரது ஊரிலேயே அவருக்குப் பாதுகாப்பில்லாத நிலை. அது மட்டுமல்ல, அவரது ஆதர வாளர்களுக்கும் அந்தக் கதிதான். அது தான் இன்றைய நிலைமை என்றால் மஹிந்தவும் அவரது சகாக்களும் சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுத்த வெற்றி எங்கே? இரண்டாவது துட்டகைமுனுவாகக் கொண்டாடப்பட்ட அவர் கிழட்டு மைனாவாகத் துரத்தப்படுவதும், பஸில் காகமாகக் கேலி செய்யப்படுவதும், கோட்டா கோ ஹோமைச் சந்தித்து, காலிமுகத்திடலில் தமது முள்ளிவாய்க்காலைத் தேடியதும்தான் மிச்சம்.



கலிங்கத்தை சாம்ராட் அசோகன் பல்லாயிரம் வீரர்களை கொன்று, அந்த நாட்டையே அழித்து வெற்றி கொண்ட போது பௌத்த துறவி அவனைப் பார்த்து "அசோகா! நீ பெற்ற கலிங்கத்தின் வலிகளை – பெறுபேறுகளைப் பார்!" – என்று தர்மத்தைப் போதித்தார். அசோகன் ஞானம் பெற்றான்.

இங்கே தமிழ் முற்போக்கு முன்னணி தலைவர் மனோ கணேசன் நாடாளுமன்றத்தில் ஆவேசமாக அந்தக் கலாச்சாரத்தை விளாசுகிறார்.

**மனோ கணேசனின் அணுகுமுறை**

"2009 மே மாதங்களில் தமிழ் மக்கள் நூறு, ஆயிரம், லட்சம் என்ற கணக்கில் கொல்லப்பட்டபோது வாளாருந்தவர்களின் வீடுகள், சொத்துக்களை இப்போது எரித்து நாசமாக்கிய இந்த வன்முறை, அமரகீர்த்தி என்ற ஓர் எம்.பியையும் அடித்தே கொன்றது.

"அன்று, பலவந்தமான கடத்தல், சட்டவிரோத படுகொலைகள், வெள் ளை வான் கடத்தல் போன்ற கலாசாரத்திற்கு எதிராக நானும் ரவிராஜும் சேர்ந்து போராடினோம். அதில் அவர் கொல்லப்பட்டார். என் மேலான (கொலை) முயற்சிகள் கைகூடவில்லை. இந்த வன்முறை ஆட்டம்தான் இன்றும் தொடர்கின்றது.

''முதலில், அரசியல் கொலைகளை 1959 இல் பண்டாரநாயக்காவைக் கொலை செய்து ஓர் ஆமதுரு ஆரம்பித்து வைத்தார். அதன்பின் பௌத்த மதத்தை அரசியலில் கலக்க விட்டீர்கள். அதுவே இந்த நாட்டை அழித்தது. இந்த ஆமதுரு குழுக்களின் அரசியல் வேண்டாம். கைகூப்பிக் கூறுகிறேன். இவர்கள்தான் இத்தனைக்கும் காரண கர்த்தாக்கள். நாம் ஆமதுருக்களை விகாரைக்கும், குருக்கள்மாரை கோவிலுக்கும், இமாம்களை பள்ளி வாசலுக்கும், பாதிரியார்களைத் தேவாலயங்களுக்கும் போகச் சொல்வோம். அவர்கள் இங்கே அரசியலுக்கு வர வேண்டாம். இந்த சபையில் ஓர் ஆமதுரு இன்று எம்.பியாக இருக்கிறார். அவரே இங்கு வந்த கடைசி ஆமதுரு எம்.பியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்." – என்றார்.

ஆனால், ரணிலோ முள்ளிவாய்க் காலை ஒட்டி ஒரு பொடி வைத்துப் பேசுகிறார். அதைப் பின்னர் பார்ப்போம்.

(வளரும்)



## காலிமுகத் திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வகையில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற நினைவுகூரலை சுட்டிக்காட்டியமையுடன், அனைவரும் இணைந்து பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை – இந்திய ஒப்பந்த நடைமுறைகளைச் சரியான திசைவழி நோக்கி நகர்த்தி செல்லும் உரிமை எமக்கு அன்று வன்முறை செயற்பாடுகளால் மறுக்கப் பட்டிருந்தாலும் – அந்த ஒப்பந்த நடைமுறைகளில் நாம் பங்கெடுக்காது போயிருந்தாலும், அன்றிலிருந்து வன்முறை வழிமுறையின் ஊடாக எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்பதை எமது கட்டாய கட்டளைகளாக ஏற்றுக்கொண்டவர்கள் நாம்

சாதாரண மக்களின் உணர்வுகளை நான் என்றும் மதிப்பவன். அமைதி வழியில் போராடும் சுதந்திரம் எவருக்கும் உண்டு. ஆனாலும் வன்முறைகள் எந்த வடிவத்தில் யாரால் முன்னெடுக்கப்பட்டாலும் அவை குறித்து நான் விமர்சனங்களை முன்வைப்பவன்.

அண்மையில் நடந்த வன்முறைகளின் போது கொல்லப்பட்ட சிங்கள சகோதர மனித உயிர்களுக்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன். தாக்கப்பட்டு, காயப்பட்டு, உடமைகளை இழந்தும் இருப்போருக்கும் ஆறுதல் கூறுகின்றேன். இதேவேளை, எமது மக்களின் நீதியான உரிமைப் போராட்டத்தில் ஆகுதியான அனைத்து விடுதலை இயக்க போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

தமிழ் மக்களின் உரிமைப் போரின் பெயரால் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளின் போதும், மாறி மாறி நடந்த இனக் கலவரங்களின் போதும் மரணித்த அனைத்து உயிர்களையும் நினைவு கூருகின்றேன்.

யுத்தத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது எமது மக்களின் ஜனநாயக உரிமை. அதை நான் ஒரு போதும் மறுத்ததில்லை. ஆனாலும் இறந்த மனித உயிர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்று கூறிக்கொண்டு, எமது மக்களின் அழிவுகளை வைத்து அதில் அரசியல் பிழைப்பு நடத்துவதை நான் ஒரு போதும் ஏற்கப்போவதில்லை.

யுத்தத்தில் இறந்த சகல மக்களையும் நினைவு கூருவதற்கும் அவர்களின் மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை 2016 ஆம் ஆண்டு இந்த உயரிய சபையில் தனிநபர் பிரேரணையாக நான் கொண்டு வந்திருந்தேன். துரதிஷ்டவசமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது ஓடி ஒளித்துவிட்டார்கள்.

ஆனால் அதிஷ்டவசமாக தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த தனிநபர் பிரேரணையை நிறைவேற்றித் தந்திருந்தார்கள். அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், என்னுடைய அந்த விருப்பத்தினை பிரதிபலிக்கும் வகையில், இறுதி யுத்தத்தில் சகல மக்களையும் சகல மக்களும் நினைவுகூரும் வகையில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விற்கும் என்னுடைய மரியாதையைப் பதிவு செய்கின்றேன்

அழிவு யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீருக்கும் பரிகாரம் தேடுவோம். ஆகுதியான அனைத்து மக்களையும் நெஞ்சில் நினைவேந்தி அழகார்ந்த சமத்துவ தேசத்தை உருவாக்குவோம்.

மேலும், அரசியல் மக்களைப் பிரிக்கிறது, பொருளாதாரம் மக்களை ஒன்றிணைக்கிறது. இன்று நாம் எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள் இலங்கைத் தீவில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரையும் ஒரே புள்ளியில் இணைய வைத்திருக்கிறது., இத்தகைய இடர்காலச் சூழலில் இருந்து அனைத்து இன மத சமூக மக்களும் மீண்டு வர வேண்டும். – என டக்ளஸ் தேவானந்தா எம்.பி. மேலும் தெரிவித்தார்.

---

## ரணில் மந்திரவாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் சித்தார்த்தன் எம்.பி. உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தத்திலே தமது உயிரைப் பலி கொடுத்த தமிழ் மக்களுடைய நினைவேந்தல் நேற்று முள்ளிவாய்க்காலிலே மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு மாத்திரமல்ல, வடகிழக்கின் ஏனைய பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மக்களுடைய நினைவாக விசேடமாக இம்முறை காலிமுகத்திடலிலே நினைவஞ்சலி நிகழ்த்தப்பட்டிருப்பது ஒரு நல்ல ஆரம்பமாக, ஒரு நல்ல அறிகுறியாக, அந்த இளைஞர்கள் எவ்வளவு தூரம் மனமாற்றமடைந்து தங்களுடைய அஞ்சலிகளை செலுத்தியிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கின்றபோது இந்த நாட்டுக்கு இது ஒரு நல்ல ஆரம்பமாகவே பாரக்கின்றேன்.

கடந்த காலங்களில் வடகிழக்குக்கு வெளியே இது யுத்த வெற்றி தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு தொடர்ந்து கொண்டாட்டமாக கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. இம்முறை அந்த செயற்பாடானது நிச்சயமாக தென்னிலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது. அவர்கள் அந்த இளைஞர்களுடைய சிந்தனையை ஏற்றுக்கொண்டு இந்த நாட்டிலே ஒரு சரியான இன ஒற்றுமையைக் கொண்டுவருவதற்கான முயற்சியை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை ஒன்று சாடையாக ஆரம்பிக்கத் துவங்கியிருக்கின்றது.

தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், முக்கியமாக பொருளாதாரப் பிரச்சினையால் ஏற்பட்ட இந்தப் பிரச்சினைகளுக்குப் பிறகு இப்போது ஆட்சிமுறைமையிலே ஒரு மாற்றம் கொண்டுவருவது சம்பந்தமாக பேசப்படுவதை நாங்கள் அறியக்கூடியதாக விருக்கின்றது. ஆட்சிமுறை நிச்சயமாக மாற வேண்டும். ஆட்சிமுறை என்று சொல்கின்றபோது ஜனாதிபதி முறைமையை மாற்றுவது மாத்திரமல்ல. நிச்சயமாக தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வை முன்வைக்க வேண்டும். ஒரு சரியான சமஷ்டி முறையிலானஓர்ஆட்சிமுறையைமுன்வைத்தால் மூலம் தமிழ் மக்களும் தாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகள்தான், அவர்களுக்கும் இந்த நாட்டிலே ஒரு சரியான பங்கிருக்கின்றது என்று சொல்லி இந்தப் பொருளாதார வளர்ச்சியிலே தங்களுடைய முழுமையான பங்களிப்பைச் செய்வார்கள்.

இங்கு வாழுகின்ற தமிழ் மக்கள் மாத்திரமல்ல, இன்று இந்த டொலர் தட்டுப்பாட்டை அல்லது துப்பரவாகவே அற்றுப் போகின்ற ஒரு வங்குரோத்து நிலையிலே புலம்பெயர் மக்களிடமிருந்து நிதியை எப்படிப் பெறுவது என்று இங்கு – இந்த சபையிலேகூட – பேசப்படுகின்றது. முக்கியமாக புலம்பெயர் தமிழர்கள் மிகப் பெருவாரியாக, ஒரு அளவுக்கு வசதியாக வாழுகின்ற அவர்கள் தங்களால் இயன்றளவுக்கு இங்கு கொண்டுவந்து முதலீடுகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு, அவர்களுடைய முதலீடுகளுக்கோ அல்லது அவர்களுடைய உயிர்களுக்கோ உத்தரவாதமில்லை என்ற ஒரு பயம் இருந்து கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களிலேகூட யுத்தம் முடிந்த பின்பு அவர்கள் இங்கு வந்த போதும்கூட இங்கு தங்களுடைய முதலீடுகளைச் செய்ய முடியாத அளவு தடைகள் போடப்பட்டு, அவர்களெல்லாம் திரும்பிச்சென்று நம்பிக்கை இழந்து இருக்கின்றார்கள். இதையெல்லாம் கட்டியெழுப்புவதற்கு நிச்சயமாக அரசு மாத்திரமல்ல, இங்கே இருக்கக்கூடிய கட்சிகள் அனைத்தும் ஒன்றாக ஒரு நியாயமான தீர்வைக் கொண்டுவந்து அதை மேற்கொள்ள வேண்டும்.

அனைவருக்குமே தெரியும் சுதந்திரம் அடைந்தநாள் தொடக்கம் இந்த நாட்டிலே மாறிமாறி ஏதோ ஒரு விதத்திலே அழிவு வந்துகொண்டுதான் இருந்திருக்கின்றது. கடைசியாக இந்த ஒன்பதாம் திகதி இது ஒரு அதிகாரப்போட்டி, பதவிப்போட்டி, இதன்காரணமாக ஒரு மிகப்பெரிய அழிவையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம். முக்கியமாகப் பார்த்தால் இந்த எங்களுடைய நாடாளுமன்றத்திலே மிக ஒரு நல்ல அமைதியான அனைவரோடும் அன்பாகப் பழகக்கூடிய பொலநறுவை நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள அவர்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். அவருக்கு எனது கட்சியின் சார்பிலே நான் அஞ்சலியை செலுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் இப்படியான கொலைகளால் நிச்சயமாக இந்த நாட்டை முன்னேற்றப் பாதையிலே கொண்டுசெல்ல முடியாது. இன்றிருக்கக்கூடிய அதாவது இவ்வளவு வீழ்ச்சி நேரத்திலும்கூட இதைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்ற நேரத்திலும்கூட இப்படியான கலவரங்கள் நிச்சயமாக ஒரு நல்ல செய்தியை வெளிநாடுகளுக்குக் கொடுக்க மாட்டா.

வெளிநாடுகளைப் பொறுத்தமட்டில் இவற்றைப்பார்க்கின்றபோது அவர்களும் ஒரு மிகப்பெரிய தயக்கம் காட்டுவார்கள் ஏனென்றால் இந்த நாடு இன்னும் திருந்தவில்லை என்ற ஒரு அபிப்பிராயத்தைத்தான்வை கொடுக்கப்போகின்றன. இன்று ஏதோ, எப்படியோ ஆட்சி மாற்றமொன்று கொண்டுவரப்பட வேண்டுமென முயற்சிக்கையில், பலரும் மறுத்தபோது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அந்தப் பதவியை எடுத்திருக்கின்றார். அவர் பொருளாதார கட்டமைப்பு, மறுசீரமைப்பு பற்றி அறிந்தவர். இவற்றிலே வல்லவர், ஆற்றலுடையவர் என்ற அபிப்பிராயம் பொதுவாக பல மக்கள் மத்தியிலே இருக்கின்றது. ஆனால் அவர் ஒரு மந்திரவாதியல்லர். அந்தத் தொப்பியிலே இருந்து எடுத்துப் பெற்றோலையும் உணவுப் பொருள்களையும் காஸ் சிலிண்டர்களையும் தருவதற்கு நிச்சயமாக அவர் ஒரு மந்திரவாதியல்லர். இருந்தாலும் என்னைப் பொறுத்தமட்டிலும் அவர் அதைச் செய்யக்கூடியவர். அதாவது பொருளாதார கட்டமைப்பை ஓரளவு சீர் செய்யக்கூடியவர் என்ற நம்பிக்கை, மேற்குலக நாடுகளிலே அவர்மேல் ஒரு நம்பிக்கை இருக்கின்றது. அதன் காரணமாக சில விடயங்களை அவர் செய்யக்கூடியவர் என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கின்றது.

இருந்தாலும் இந்த நாடு சரியான முறையிலே முன்னேற்ற வேண்டுமென்றால் ஒரு தனி நபரிலே நம்பிக்கை வைத்து செய்யப்பட முடியாது. அவர் தனி நபராக அதை செய்து முடிக்க முடியாது. இந்த நாடாளுமன்றத்திலே இருக்கக்கூடிய அனைவருமே சரியான முறையிலே செயற்பட வேண்டும். ஒற்றுமையாக செயற்பட வேண்டும். ஆகக்குறைந்தது இந்த நாடு இருக்கின்ற பொருளாதார வங்குரோத்துத் தன்மையை நன்றாக உணர்ந்து அரசியல் செய்வதை விடுத்து ஒரு சரியான முறையிலே கட்டியெழுப்ப வேண்டும்.

தமிழ் தேசிய இனப்பிரச்சினை என்பது மிக நீண்ட காலமான பிரச்சினை. இன்று இருக்கக்கூடிய பொருளாதாரப் பிரச்சினையும் அண்மையிலே வந்ததல்ல. நீண்டகாலமாக வந்திருந்தாலும் அண்மையிலேதான் இவ்வளவு வங்குரோத்துத் தன்மைக்குப் போயிருக்கின்றது. ஆனால் எங்களுடைய பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினை. அதைத் தீர்ப்பதன்மூலம்தான் இந்த நாட்டிலே ஒரு நிரந்தரமான பொருளாதாரகட்டமைப்பை கட்டியமைக்கமுடியும். அதன் மூலம்தான் இந்த நாடு சுபீட்சத்தை நோக்கிப் போக முடியும் என்பது உறுதியான ஒன்று. அதை செய்யவேண்டும். – என்றார்.

## அரசில் சேரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே என்.ஸ்ரீகாந்தா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் ஊடக சந்திப்பொன்றில் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றினால் அமைச்சரவையில் இணைவது தொடர்பில் பரிசீலிக்க முடியும் என கருத்து தெரிவித்திருந்தார்.

தமிழ் தேசியத்தை வலியுறுத்துகின்ற தரப்புக்கள் சிங்கள – பௌத்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் இருப்பது என்பது நீண்ட காலமாக நிலவி வந்த ஒன்றாகும். அதற்கு விதிவிலக்காக செயற்பட்டவர்கள் தங்கள் சொந்த தொகுதியில் தொகுதியிலேயே தோல்வி அடைந்ததும் வரலாறு.

விக்னேஸ்வரன் குறிப்பிட்ட மூன்று நிபந்தனைகளை பொறுத்தவரை அவை நியாயமானவை. ஆனால் அவற்றை நிறைவேற்றினால் அரசாங்கத்தில் இணைவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்பது பாரதூரமான ஒன்றாகும். அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

விக்னேஸ்வரன் இந்த விடயத்தில் தனது கருத்தை மாற்றிக் கொள்வார் என நான் நம்புகிறேன். இந்தக் கருத்து இனி சிந்தனையில் கூட எழக்கூடாது. அந்த சிந்தனை மீண்டும் உருவானால் நாங்களும் விக்னேஸ்வரன் அவர்களும் ஒரு போதும் அரசியலில் ஒன்றாக பயணிக்க முடியாது என்பதை தயக்கமின்றி சொல்வேன்.

அவரை அவரது வழியில் விட்டு எங்கள் பயணத்தை நாம் தொடர்வோம்.

இது தொடர்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கடுமையாக தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார். விக்னேஸ்வரன் தொடர்பில் விமர்சனத்தை முன்வைக்க கஜேந்திரகுமாருக்கோ அல்லது ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளை சேர்ந்தவர்களுக்கோ முழு உரிமை உண்டு. ஆனால் அது நாகரிகமானதாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் மூன்று பிரிவாகப் பிரிந்து இருந்தாலும் கூட, நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. நாங்கள் ஒன்றாக சேராவிட்டாலும் கூட ஒரு சில விடயங்களிலாவது ஒரே நிலைப்பாட்டில் இருப்பது அவசியமாகும். ஆனால் இவ்வாறான கடுமையான விமர்சனங்கள் அதனை பாதிக்கும்.

விக்னேஸ்வரனின் தோற்றப் பொலிவை வைத்துப் 'பொட்டு', 'தாடி' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்துள்ள அரசியல் விமர்சனம் என்பது மிகவும் அநாகரிகமானது.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவையில் விக்னேஸ்வரன் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட காலத்திலும் விக்னேஸ்வரனின் தலைமையை ஏற்கத் தயார் என கஜேந்திரகுமாரும் அவரது தோழர்களும் ஓடிக் கொண்டிருந்த காலத்தில் கஜேந்திரகுமாரின் கண்ணுக்கு விக்னேஸ்வரனின் பொட்டும் தாடியும் புலப்படவில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஆனால் சக தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனை இவ்வாறு குறிவைத்து தாக்குகின்றமையை கஜேந்திரகுமாருக்கு வாக்களித்த மக்களே எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள் என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

தமிழ் பண்பாட்டையும் இந்து கலாசாரத்தையும் பேணும் விக்னேஸ்வரனுக்கு அதனைப் பின்பற்ற முழு உரித்துண்டு. இவ்வாறான நிலையில் நாங்களும் இதே பாணியில் பதில் அளித்தால் தமிழ்த் தேசிய அரசியலில் அனர்த்தமான ஒரு நிலை உருவாகிவிடும். – என்றார்.